KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ளு மே மீ 30 உ [No. 22

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 337

2. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 8-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 339

3. உதயண சரிதம்.
S. சோமசுந்தர தேசிகர் 341

4. சூரியன் (தூமகேதுக்கள், எரி நக்ஷத்திரம்)
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A.,L.T., 344

5. கம்பராமாயணம் (கிட்கிந்தைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B. L. 346

6. ஒத்தெல்லோ (அங்கம் 2. களம் 3.)
Shakespeare's "Othello" 348

7. கலித்தொகை (மருதக்கலி 3.)
T. A. கனகசபாபதி முதலியார் 350

8. வர்த்தமானம் 352

கலாநிலயம்

வித்தகமும் வித்தைகளும் 2.

பூதசாத்திர வித்தைகளின்போக்கு எவ்வகைத்தாம் என்பதை முன்னைய இதழில் C. E. M. ஜோட் என்பவர்தம் உதவிகொண்டு விளக்கினோம். அவர் சொன்னவைகள் அதனோடு முடியவில்லை; இன்னும் வருகின்றன :—

Science, as Bertrand Russell has pointed out, does not change human desires. It merely makes it easier for human beings to give effect to their desires. If their desires are good, this added power of realizing them is good; if they are evil, it is correspondingly an evil.

Now man is still in many respects the same primitive creature, gullible, cruel, vengeful, credulous and vain as he was in Paleolithic days. Scratch the modern man, and, as the war showed, the savage appears. Civilization, I repeat is only sin deep. Now science has taken this paleolithic savage posturing as civilized man and endowed him with the powers of Gods, with the result that he is within measurable distance of exterminating himself. Give a boy an air gun and he may shoot a sparrow or break a window, but that is the extent of the damage; give him a modern Lee-Metford rifle and he becomes a public danger. The moral is obvious; it is not that mankind is worse than it was, merely that, if it is to escape destruction, it has a need to be better.

Until our social wisdom is able to cope with our mechanical skill, and we learn to live up to the challenge of our new powers, the discoveries of science will tend to our discomfiture rather than to our good. That they have done so in the past, the history of the past hundred and fifty years bears ample testimony. Again and again the benefits which each fresh advance in applied science might have bestowed have been cancelled by the circumstances attending its use.

The last century, it is notorious, witnessed man's acquisition of power over natural forces. He learned to control nature. Cotton was cheap, coal was torn from the bowels of the earth, and one man and a machine could turn out four times as many shirts and vests as a hundred men without machines formerly produced in twice the time. Yet the only way in which men could recover from the dust, the dirt, the stench, the foul air, the racket and the over crowding which cheap cotton and coal brought in their train, was by retiring into the country where Nature was still in more or less unimpaired control over man, with the result that those who made the money out of the powers which the scientists had won, took care to live as far as possible from the places

in which the money was made. As for the multiplicity of underclothing, the number of potential wearers increased almost as fast as the machines increased the number of vests and shirts for them to wear—they had to in those early days, when every child was a wage-earner from the age of five, if people were not to starve —with the result that men were very little better clad than they were before.

About the same time medical sciences was making great advances in the art of maintaining life in aged bodies, in consequence of which we now keep alive many old and disagreeable people whom previous civilizations had the sense to allow to die. It also achieved an unprecedented skill in the art of patching up broken bodies; but chemical science was meanwhile making equal strides in the power of blowing them to pieces, so that in the last war men could be seen employing all the resources of medical science to piece together shattered bodies, in order that the resources of chemical science might be utilized for the purpose of shattering them again. Since even the best surgeon can only patch up one broken or mutilated man at a time, while the chemist has enabled the gunner to blow to pieces a score at once, the increase in man's power of destroying the body must pe reckoned on balance te have outweighed any gain from his increased knowledge of how to patch and restore it.

We have reached a new and wider understanding of the problems of insanity; mental derangement is not now considered to be a single homogenous malady, alike in its causes and effects, nor are lunatics any longer regarded as incurable. But this improvement in the treatment of the insane is more than offset by the rapidly increasing number of the insane. Modern science, which is undoubtedly responsible for the better treatment, is responsible no less for the condition of turmoil and strain which calls for its increasing exercise.

A hundred and twenty years ago the man with a taste for a country life whose work lay in the city lived five miles out and walked the distance between his house and his office twice a day. To-day science has so improved means of transit that by taking a tube or a suburban electric train he finds the radius of accessibility increased from five miles to twenty. But in making a distance of twenty miles possible, science has also made it necessary; for society has shown its sense of the transit advantages which science has conferred by immediately extending its cities to the extreme limits of the radius that science has enlarged, with the result that, although a man can travel further to find the country, the country is proportionately further to find. As a consequence, the country lover must now spend as long travelling to his work as he did before; but instead of enjoying an hour and a half of health-giving exercise, he must burrow twice daily like a mole in the earth, scowl behind his paper as an alternative to meeting the opposed scowls of those ranged in front of him, and emerge at his journey's end with heavy head and shattered nerves, blinking like an owl at the sunlight he has lost.

The modern science has solved the transport problem by turning the home into a dormitory and its owner into a peripatetic mole.

By the invention and perfection of contraceptives science has taught us how to control birth. But instead of using our knowledge to improve the species by grudually eliminating the unfit and deliberatly breeding from chosen stocks the type of citizen we require, we have allowed the invention to depress the level of the population by a dysgenically selective birth-rate. The idle, the feckless, the half-witted and the dull, all those who are too stupid to know how to apply birth-control devices or too careless to use their knowledge if they had it, continue to breed like rabbits, while the more responsible members of the population partially sterilize themselves by their refusal to bear more children than they can bring up in decency and comfort. Thus the better stocks fail to keep up their numbers, while society grows like a pyramid continually flattening out at the top and proliferating at the base.

இவ்வாங்கிலக் கட்டுரையின் பிண்டப் பொருள் பின்வருமாறு:—

மானுட இச்சைகளைப் பூதசாத்திரம் மாற்றுவ தில்லை. மனிதர் தம் இச்சைகளை நடத்திக்கொள்வதையே பூதசாத்திரங்கள் எளியதாக்குகின்றன. இச்சை நல்லதாயின், இச்சக்தியும் நல்லது, இல்லையேல் இல்லை. நம்முடைய நாகரிகம் பாவத்தையெட்டும்வரையிற்றான் ஆழ்ந்திருக்கின்றது. இனி மனிதர் தம்மைத் தாமே மிகவிரைவில் அடியுடன் அழித்துக்கொண்டு விடுவார். முன்னினும் மனிதர் இக்காலத்தில் கெட்டவர்கள் ஆகிவிட்டனர் என்பதுபிழை. தீயோர் தம் தீமைகளைச் செய்யக் கருவிகள் அதிகம் இப்பொழுது எளிதிற் கிடைத்திருக்கின்றன; அவ்வளவே. மனித இனமே படுநாசமாகித் தொலையாமல் காக்கப்பெற வேண்டுமானால், முன்னினும் மனிதர் இப்பொழுது நல்லவர்க ளாகவேண்டு மென்பது அதிகமும் அவசியமா யிருக்கின்றது. பூதசாத்திரங்களின் உதவியால் கண்டுபிடித்திருப்பவைகளின் நன்மைகளெல்லாம், அவைகளை உபயோகப் படுத்துகின்ற முறைகளைக் காணும்போது முற்றிலும் அழிந்துவிடுகின்றன வென்பது மீண்டும் மீண்டும் தெரியவர வில்லையா?

வைத்திய சாத்திரமும் வளர்ந்து வருகின்றது. வயதால் தளர்ந்த உடல்களில் உயிரைப் பிடித்துவைக்

கக்கூடியவர்களாக இருக்கின்றோம். இன்னவர்களைச் சாகவிடுவதே நல்லதென்று பண்டைக்கால மக்கள் கொண்டிருந்த அறிவும் நமக்கு இப்பொழுது இல்லாமற் போயிற்று. உடைந்துபோன உடல்களை ஒட்டிவைக்கும் இரணவைத்தியத் திறமை இக்காலத்திலதிகம். எனினும், இரசாயன சாத்திரமோ, உடலைத் துண்டுதுண்டாகச் சிதறடிக்கும் வழிகளை மிகமிகவேகமாகக் கண்டுபிடித்துக்கொண்டுவருகிறது. முன்னே நடந்த ஐரோப்பியயுத்தத்தில் இவ்விபரிதத்தைநன்கு காணலாம். வைத்தியசாத்திர முயற்சியால் உடல்வலியுடையவர்கள் ஆக்கி மனிதரைப் போர்க்களத்தில் கொணர்ந்துநிறுத்தினர்கள். இரசாயன சாஸ்திரத் தேர்ச்சியினல் செய்த வெடிமருந்துகள் இவர்களைப் பொடியாக்கின. இப்படிக் கைகால் உடைந்தவர்களை இரணவைத்தியத் திறமையால் ஒட்டி ஒட்டி முழு உடலினராக்கினர். எதற்காக! மீண்டும் இவர் போர்க்களம்புகுந்து இரசாயனசாஸ்திர முறைப்படி உடைவதற்கே ஆகவன்றோ! என்ன மதியீனம்!

பைத்தியம் பிடித்தவர்களுக்குச் செய்யவேண்டிய வைத்திய முறைகளில் இக்காலத்தவர் நல்ல தேர்ச்சியடைந்திருக்கின்றனர். ஆயினும் இப்பைத்தியநோய்ச் சிகிச்சையின் திறமை மிகுகின்ற வாங்கே பைத்தியகாரர்களின் தொகையும் அதிகரிக்கின்றது. சிகிச்சை முறைகளின் தேர்ச்சிக்கும் பூதசாத்திர வித்தைகள் தாம் காரணம்; மற்றுப், பைத்தியம் பிடிப்பதற்கு ஏதுவாயிருக்கின்ற அல்லலும் அலைச்சலும் அமைதியின்மையும் அதிகமாவதற்கும் அச் சாத்திரவித்தைகளே காரணமாகின்றன.

நாட்டுப்புற வாழ்க்கையில் விருப்பமுள்ள ஒருவன் நூற்றிருபது வருடங்களுக்குமுன் பட்டணத்தின் எல்லையிலிருந்து ஐந்து மைல்களுக்கு அப்பால் வசித்துத் தன்னுடைய உத்தியோகத்திற்கு நடந்து சென்று திரும்புவான். இப்பொழுது எலக்டிரிக் ரயில்களும் தரையின்கீழ் குடைந்துசெல்லும் வண்டிகளும் வந்துவிட்டன. ஆகையால் பட்டினத்திலிருந்து இருபதுமைல்தூரத்திலு மிப்பொழுது வசிக்கக்கூடியவனயிருக்கின்றான். பூதசாத்திரமே இவனை இத்தூரம் துரத்தியதென்றுஞ் சொல்லலாம். இப்படி இவன் இன்று நாட்டுபுறத்தைத் தேடிச் செல்லச் செல்ல அதுவும் அகன்றுகொண்டே போகின்றது. இதனல், முன் இவன் வசிக்குகின்ற இடத்திலிருந்து உத்தியோகம் செய்கின்ற இடத்திற்குப் போவதற்கு எவ்வளவு நேரம் ஆயிற்றோ அவ்வளவு நேரம் இப்பொழுதும் ஆகின்றது. இதன் முன்னே ஒன்றரை மணி நேரம் நடந்ததனல் பெற்ற ஆரோக்கியத்தை இப்பொழுது இழந்துவிட்டான். அதற்குப் பதிலாக இப்பொழுது நாள்தோறும் இரண்டுதரம் எலிகளை போலத் தரையின்கீழ் குடைந்து சென்று, தனது சிடுசிடுப்பை வர்த்தமானப்பத்திரிகையின் பின்னே மறைத்து, தளர்ந்த நரம்பும் நோகுந் தலையுமாக இரயிலைவிட்டிறங்கி ஆந்தைபோல அவனிழுந்த வெளிச்சத்தைக்கண்டு விழிக்கவேண்டியவனயிருக்கின்றான்.

கர்ப்பத்தடை முறைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இதனல் உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் சந்ததியற்றுப் போகும்படி செய்துகொள்ள நேர்கின்றதுடன், மூடர்களும் ஈனர்களும் இம்முறைகளை அறியாதவர்களாய் எலிகளென்னப் பிறந்து பிறந்து பெருகுகின்றனர். இவ்வளவுதான் இதனற் கண்ட பலன்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[326 வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பத்து, 8-ம் தசகம்

1-ம் பாசுரம்

மாயாவாமனனேமதுசூதாநீயருளாய்
தீயாய் நீராய் நிலனுய் விசும்பாய்க் காலாய்த்
தாயாய்த்தந்தையாய்மக்களாய்மற்றுமாய்முற்றுமாய்
நீயாய் நீநின்றவாறு யிவையென்ன நியாயங்களே.

அவதாரிகை:—சென்ற 7-ம் பத்தில் ஆழ்வார் தம் மனோரதத்தின்படிபகவானின் திவ்வியஸௌந்தரியம் அகக்கண்ணுக்குப்புலனுனுலும்பிரத்தியக்ஷமாய்எப்போதும் கண்டுஅநுபவிக்கத் தம் தேஹமாகிய பிருகிருதி சம்பந்தம் தடையாகநிற்பதைபற்றி வெகு பிரகாரமாய் அலற்றிப் பரிதபித்தார். தாம்பகவானைஉள்ளபடியே ஆழ்ந்த பக்தியால் அறிந்து அவனின் குணதிசயங்களையும் திவ்விய ஸௌந்தரியத்தையும் உணரலாகித் தா மவனுக்கே ஆள்பட உரித்தானவரென்பதைத் திருவுள்ளத்தில் கடைபிடித்தார். பகவத்கீதை 11-ம் அத்தியாயம் 54-ம் சுலோகத்தில் "பக்தியாத்வநந்யயா சக்ய அஹமேவம் விதோர்ஜுன; ஞாதும் த்ருஷ்டுஞ்ச தத்வேந ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப" - (நான், என்னிடத்திலேயே வைக்கப்பட்ட பக்தியினுலேயே உள்ளபடி அறிகிறதற்கும் உள்ளபடி பார்க்கிறதற்கும் என்னை அடைவதற்கும் தக்கவனுகிறேன்) என்று பகவான் பணித்துள்ள கட்டளைப்படி ஆழ்வாருக்குண்மையான அறிவு கைவந்ததைப் பலவிடத்தும் பரக்கச்செப்பியிருக்கிறார். அடுத்த சம்மாநம் அவனைக் காணுவதென்று விளம்பப்பட்டிருக்கிறதே, அவனைக் காணுவது பக்தியோகம் முதிர்ந்தவர்களுக்கும் வாய்க்குமோ? இம்மஹானே திருவாய்மொழி தொடக்கத்தில் 2-ம் பாசுரத்தில் பகவத்தரிசனம் "மனனக மலமற மலர்மிசை யெழுதரு மனனுணர் வளவிலன் பொறியுணர் வளவிலன்" என்னக் கூறமிடத்து மனிதருடைய வெளி யிந்திரியங்களுக்கும் யோகாப்பியசத்தால் பரிசுத்தமான மனஸுக்குங்கூட அகப்பட வாய்க்காதென்று அல்லவோபாசுரம். இப்படி உரைத்தது கல்யாணகுண ஸ்வரூபமும் திவ்விய ஸௌந்தரியமுமகப்பட குறித்தபடி: அதாவது இவைகளைக் காண்பது அரிதென்றார். தமக்கு மாத்திரம் இவைகளை அநுபவிக்க ஈசன் இன்னருளால் (மதி - எம்பெருமானின் திவ்வியாத்ம ஸ்வய

ரூப ஞானமும், நலம்-அவனிடத்தில் உண்மையான பக்தியுமாகிய மதிநலம்) நிர்ஹேதுகமாகக் கிடைத்ததென்று திருவாய்மொழித் தொடக்கப்பாசுரத்திலேயேயருளிச்செய்தார். அப்பாசுரத்தில் அவன் திருவடி மலர்களில் எப்போதும் அமர்ந்து "தொழுது எழு" என்று தம் திருவுள்ளத்தைக் குறித்து ஆஞ்ஞாபித்தார். தன்னைப் போன்று எம்பெருமானிடத்தில் பக்தியுள்ளவர்களை மானிடர்களில் காணாமையால் "முழு நலமான" - பூர்ணானந்த சுயரூபனான பகவானை இவர்கள் இழந்துபோகின்றார்களே என்று வருந்தி இவர்களைப் பக்திமான்களாக ஆக்கியாகிலும் அவர்களோடு கூடிப்பகவானின் சுயரூப குணங்களைச்சொல்லியும் கேட்டும் "பரஸ்பரம் பாவயந்தஃ!" என்று சொல்வதுபோல் கூடி யநுபவிக்க வேண்டுமென்று அபேக்ஷை பிறந்து ஆழ்வார் இரண்டாம் தசகத்தில் பரோபதேசத்திலிழிந்து எம்பெருமானைக் காணுதல் வேண்டுமானால் "விடுமின் முற்றவும்" என்று உலகப்பற்றுகள் எல்லாவற்றையும் ஒழித்து விடுங்கோள் என்று தொடங்கி "உள்ளம் உரை செயல்" இம்மூன்றையும் நசிபித்து "எம்பெருமானிடத்தில் இறைபற்றுங்கோள்": இவ்வண்ணம் அவனின் "எழில் சம்பத்து" இவைகளில் மனத்தை ஊன்றி அவனிடம் அடைவீர்களாகில் எல்லா உலகப்பற்றும் விடும், இதுவே மாறாதசீரிய புருஷார்த்தமென்று எல்லா ஜீவாத்மாக்களுமிதுபோல் "நேர்நிலை"யாமென்று ஆராயுமிடத்தில் உலகத்தாருக்கே எளிதில் தோன்றுமென்றும் காட்டி "வண்புகழ்நாரணன் திண்கழல்சேரே" என்று இரண்டாம் தசகத்தை முடிக்கிறார். மூன்றாம் தசகத்தினில் தம்மைத் தாமே வினவிக்கொண்டு எம்பெருமான் எவ்வெவருக்கும் காண்கைக்கு அருமையென முன்னர்ச் சாற்றினவர் "பத்துடைய அடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கு அரிய வித்தகன்" என்று உபதேசம்மேல்அறிவிக்கிறார். அதாவது "எம்பெருமானைக்காண வேணுமென்ற அபேக்ஷையுடையார்க்குஅவன் காணலாம்படி எளியவனாவான். மற்றவர்களுக்குக் கண்டு அறியக் கூடாதவன் என்றருளிச் செய்கிறார். இவர் திருவாய்மொழியில் உபதேசிக்கின்ற பக்தியோகம்பகவானிடத்தில் இடைவிடாத அன்பும்அவனுக்கே ஆள் ஆகவேண்டுமென்ற தவமுயற்சியுமாம் இது. நெடுவழி இப்போது நடையாடும் பக்தியென்னப் பெயர்பெறும் வணக்கநெறிகள் வேதாந்திகள் கூறுகிற அவபக்தியோ வேறு. அது தாழ்ந்த பலன்களான ஐசுவரியங்கள் போகங்கள் இவைகளைப்பற்றி வழிபடுவதேயாகும். மற்றையபூர்ணமான தவநெறியாகிய "பக்தியோக"க் கிளையாகிய ஆழ்ந்த தீவிரமான பக்தியே பரபக்தி. இவ் வாழ்ந்த பக்தியில் அமர்ந்த பின்னர் இதன்மேல் முதிரும் திருடமான பரபக்தி துடங்கலாகாதோ வென்று கேட்கலாம். நடுவிடையில் "பரஞ்ஞானம்" அதாவது இந்திரியங்கள் சுவயம் அநுபவித்ததுபோல் ஓர் விலக்ஷணமான ஞானம் உண்டாகும். இதுதான் காணும்படி ஏன் உண்டாகவேண்டுமென்றால், சித்திரமும் கைப்பழக்கம் கவிதையும் நாப்பழக்கம் என்னுமாப்போலே "பக்தியோகத்தால் பகவான் சுயரூபத்திலும் சுபாவத்திலும் எப்படிப்பட்டவனாயிருக்கிறானோ அப்படிக்குள்ள அவனை நிஜபக்தியால் உண்மையாக எவன் அறிகிறானோ அவன் என்னை இவ்விதமாயறிந்தபிறகு அந்த உண்மையான பக்தியினாலேயே என்னை அடைகின்றான்" என்று மேலேயும் கீதாசாரியன் 18-ம் அத்தியாயம் 55-வது சுலோகத்தில் நிபந்தனை ஏற்படுத்துகின்றார். இதன் கருத்து: பக்தி உண்மையானாலும் அது சஞ்சலப்படாமல் வேரூன்றி முளைத்து ஓங்கி வளர்ந்து விளையவேண்டும்; சிலகாலம் பரிச்சியம் ஏற்பட்டால்தான் ஊர்ஜிதப்பட்டுப் பக்தி முதிர்ந்து பகவானைக் காண்டலில் ஸுகமும் அவனைப்பிரிந்திருத்தலில் துக்கமும் ஏற்பட்டுப் பரமபக்திக்கு அந்தப்பக்தன் உரித்தாவானென்று திட்டப்படுத்தலின் நிமித்தம். இதைத்தான் "அபரோக்ஷ ஞானம்" என்று வேதாந்திகள் விவஹரிக்கின்றார்கள். அதாவது இந்திரியங்களின் அபேக்ஷையால் கிட்டும் ஞானம் "பரோக்ஷ ஞானம்" இவைகளின் உதவியின்றிக்கே இந்திரியங்களால் கிடைக்கக்கூடிய அநுபவத்தை அவற்றின் உதவியில்லாமலே ஞானத்தால் அடைவதுதான் ("அ" negative) அபரோக்ஷஞானம்". இதை வைணவர்கள் "பிரத்தியக்ஷ ரூபாபன்ன ஞானம்" என்னும் பெயர் வைத்து விவஹரிப்பதுண்டு. இதுதான் ஐம்பொறிகள் அநுபவித்ததுபோல் ஏற்படும் ஞானம் - இந்த ஞானம் எவ்வண்ணம் ஏற்படுமென்பது தெளியாமல் தேராமல் மயங்கின மாக்களுக்கு, "வேதம் தமிழ்செய்த மாறனாகிய" இவ்வாழ்வார், பகவானைப் பிரத்தியக்ஷமாய்க் காண வேண்டுமென்ற பேரவாக் கொண்டு 7-ம் பத்து 2-ம் தசகத்தில் அரங்கநாதப் பெருமானிடத்தில் மோஹித்திருப்பதை நாயகியின் திருத்தாயார் பாசுரத்தால் "உன் எண்ணம்தான் இவள்திறத்தில்என்னவாயிருக்கிறது" என்று வினவுகின்றார். இந்தத் தீவிர ஆசை பகவானைக் கண்டு நேரே கலந்து அநுபவித்த பிறகும் திருப்பேரைக்கு மிருக வேட்டைக்குப் போகிறேனென்று நாயகியின் சம்மதம்பெற்று விடைகொண்ட பகவான் சற்றுத் தாமதித்தால் தாய்மாரை மீறித் திருப்பேரைக்குத் தனி வழியாய் ஊரவர் ஏசினாலும் ஏகத்துணிந்த ஆழ்வார் அவர்களை நிர்ப்பந்தித்துப் புறப்பட்டதையுங் கண்டனம். 6-ம் தசகத்தில் எம்பெருமானது குணம்அழகு முதலியவற்றை எண்ணிப்பிரத்தியக்ஷமாக அநுபவிக்கும்படி ஆழ்வார் மனம் உருகிக் கூப்பிட்டதையும் படித்தோம். 7-ம் பத்து 7-ம் தசகத்தில் பகவானினது திவ்வியாவயவ ஸௌந்தரியம் உருவெளித்தோற்றத்தில் உண்மையைப்போன்று காணப்பட்டதினால் தாம் வருந்திய முறைகளை "அன்னைமீர்காள் உமக்கு என்னை அடையும் ஆசையை ஒழித்துவிடுங்கோள், நான் அடிமாண்டு போவேன்" என்று "அன்னைமீர்காள் நசை என் நுங்கட்கே?" என்று முடித்தார். இவ்வண்ணம்இம்மஹான் தமிழ்இலக்கிய புலனெறி விளக்கத்தால் உலகருக்கு வேதாந்த அர்த்தங்களைத் தெளிந்து தேற அறியச் செய்த பரமோபகாரத்தை ஆழ்வாரின் சிரேஷ்ட சீடராகிய மதுரகவிகள் "அருமறைகள் தமிழ்செய்தானருளே கொண்டு துணிந்த" நெஞ்சினராய் ஒழிந்து தோன்றக் காட்டும் தொல்வ

ழியே நல்வழிகள் துணிவார்கட்கே'' என்று அருளிச் செய்தார். இந்தப் "பிரத்தியக்ஷ ரூபாபன்னஞானம்" முதிர்ந்து பரமபக்தியால் பகவானை அவனின் ஆணையும் திருமகளின் ஆணையு மிட்டு வளைத்ததைப் பின்னர் 10ம்பத்தில் ஆழ்வார் நிதர்சனப்படுத்துகின்றார். இந்தப் "பராபக்தி'' காஷ்டையில் பகவானின் திருவடிகளைப்பிடிக்க யத்நித்தபோது திருவடிகள்கைக்கு அகப்படாமல்ஏமாந்துபோகிறவரையில்ஊர்ஜிதவிசுவாசத்தில்அமர்ந்துகடந்துபோகும்சுபாவமுள்ளது. திருக்குறள் "நனவினு னந்நீத்தாரென்பர் கனவினுற் காணார்கொலிவ்வூரவர்'' என்றகூறும்."இவ்வூரினிடத்தே உள்ள பெண்கள் நனவினிடத்தேநம்மைவிட்டுப் பிரிந்தாரென்று நம்முடைய காதலரைக் கொடுமை கூறுகின்றனர்; இவ்வண்ணம் கொடுமை சொல்பவர் அவர் நம் கனவினிடத்தே நீங்காது வருதலைப் பார்த்தறியாரோ?'' என்று தலைவி மோஹங்கொண்டுதான் கனவில் உண்மையாகவே காதலரைக் காண்பதாகத் துணிந்து பிறரும் தன்போல் காணமுடியும், அப்படி அவர்கள் செய்யாதது ஊரவரின் கொடுமையேயென அநுமாநிப்பது இங்குக் கவனிக்கத் தக்கது.

அவதாரிகை:—பகவானின் திவ்விய ஸௌந்தரியம் உருவுவெளிப்படாநின்று ஆகர்ஷிக்க அது எப்போதும் நிலைநின்று தமக்குத் தங்கவில்லையே என்று ஆழ்வார் நசையற்று ஒழிய முயற்சித்தாலும் அவரை இடைவிடாமல் திரும்பியும் பற்றித் தொடர்ந்து ஆசைப்படும்படி செய்யும் பகவானினுடைய குணவிகல்பத்தில் ஆச்சரியப்பட்டு இதென்ன சேராச் சேர்த்தியென்று விஸ்மயப்பட்டு உன்உள்ளபடிதான்என்னவோவென்று பகவானை ஆழ்வார் வினவுகிறார். இவ்வளவேயாம் இருக்கும்படி என்று தமது விசித்திர சக்திகளையும் விநோதங்களையும் விபூதிகளையும் பகவான் ஆழ்வாருக்குக் காட்டிகொடுக்கிறார். அவற்றை எல்லாம் இப்பாசுரம் விவரிக்கிறது.

உரை:—மாயா-இப்பாசுரத்தில் உரைக்கப்படுகிற விசித்தர சக்தியுள்ளவனே! வாமனனே - பாவிபூதிகளையுடையவனு யிருந்துகொண்டு அவற்றை எல்லாமொரு சிறுவடிவத்தில் அடக்கி வாமனரூபனுகவந்தவனே!மதுசூதா-ஆச்ரிதவிரோதிகளையடக்குபவனே, தீயாய் - அக்நிரூபமாக இருக்கிறவனே, நீராய் நிலனாய் விசும்பாய் காற்றாய் தாயாய், தந்தையாய் (மக்களாய்) - புத்திரர்களாய் (மற்றுமாய்) - மற்றுமுள்ள பந்துக்களாய் (முற்றுமாய்) எல்லாவித சிருஷ்டியின் காரியமுமாய் அதாவது எல்லா விபூதிகளுமாய் (நீயாய்) - இவற்றோடு கலப்பன்றிக்கே உன்னுடைய அஸாதாரண ஆகாரத்தை யுடையனுமாய் நீ நிற்கிறபடி, நீயருளாய்-என்ன (நியாயங்கள்) காரணங்களுக்காக ஏற்றியிருக்கின்றாயென்று எனக்குத் தெரியச் சொல்லவேணு மென்றார்.

2-ம் பாசுரம்

அங்கண்மலர்த்தண்துழாய்
முடியச்சுதனேயருளாய்
திங்களும்ஞாயிறுமாய்ச்
செழும்பல்சுடராயிருளாய்ப்
பொங்குபொழிமழையாய்ப்
புகழாய்ப்பழியாய்ப்பின்னும்நீ
வெங்கண்வெங்கூற்றமுமா
யிவையென்னவிசித்திரமே.

உரை:-அங்கண்-அழகிய கண்களையுடைய, மலர்-புஷ்பங்களும், தண்துழாய்முடி-சீதளமான திருத்துழாயை புனைந்த, முடி - கீரிடமுள்ள, அச்சுதனே-அழிவில்லாதவனே. திங்களும் ஞாயிறுமாய், செழும்-வெகு பிரகாசமான, பல்சுடராய் - நக்ஷத்திரங்களாய், இருளாய் - இவைகளுக்கு எதிர்த் தட்டான இருளாய், பொங்குபொழி மழையாய்-செறிந்தநீர்த்தாரை பொருந்திய மழையாய், புகழாய் பழியாய், பின்னும் இவை யெல்லாமல்லாமலும், வெங்கண் - குரூரமான பார்வையே சுபாவமாகவுடைய, வெங்கூற்றமுமாய் - யமசுவரூபமாய், இவை - இவைபோன்ற, என்ன விசித்தரம்-என்ன ஆச்சரியமான ஸ்வபாவமாயிருக்கிறாய். இதற்கெல்லாம் காரணமுண்டாகில், அருளாய் - அநுகிரஹம்செய்து சொல்லவேண்டும் என்கிறார்.

உதயண சரிதம்

[328-வது பக்கத் தொடர்ச்சி]

உதயணன் தன்நாட்டைப் பெற்றுஅரசனுக ஆளுகையில் கோஷகன் என்றொரு மந்திரி இருந்தான். இவன் முற்பிறப்பில் அஜித நாட்டில் பிறந்து கொதூகலகன் என்றபேரோடு வாழ்கின்ற காலத்திலே அந்த நாட்டில் பஞ்சம் உண்டாயிற்று. இவனும் இவனுடைய மனைவியும் அந்த நாட்டை விட்டு வேற்று நாடு சென்று பிழைக்கலாமென் றெண்ணி, தங்களுடைய ஒரே பிள்ளையைத் தூக்கிச் சென்றனர். குதூகலகன் பிள்ளையைத் தூக்கிச் செல்வது துன்பமாக இருந்ததால் வழியில் பிள்ளையைப் போட்டுவிட்டான். இதனைக் கண்ட இவனது மனைவி அழுது பிள்ளையைப் பெற்று வழிநடந்தாள்.இந்தக் குற்றத்திற்காகஇவன் மறுபிறப்பில் கோசாம்பியிலுள்ள ஒரு தாசி வயிற்றில் பிறந்தான். 'தேவடியாள் வீட்டிலே ஆண்பிள்ளை பிறந்ததுபோல' என்ற பழமொழிக்கு இணங்க அந்தத் தாசி பிறந்த பிள்ளையை முறத்தில் வைத்துக் குப்பையில் எறிந்துவிடச் செய்தாள்.

அன்று உதயணனுடைய பொக்கிஷ மந்திரி அரண்மனையிலிருந்து திரும்பி வருகையில் அரண்மனைச் சோதிடரைக் கண்டான். அவரைக் கண்டு அன்று உண்டான நட்சத்திரங்களின் சேர்க்கையால் உண்டாகும் பயன் என்னவென்று கேட்டான். சோதிடன் நட்சத்திரசமாகமத்தைக் கூர்ந்து நோக்கிவிட்டு, இன்றுகாலையில் இந்தக் கோசாம்பிநகரில் ஒருபிள்ளை பிறந்திருக்கிறதென்றும், அது வரப்போகும் பொக்கிஷமந்திரி யாதுமென்றும் கூறினன். இதனைக்

கேட்ட பொக்கிஷமந்திரி பொறாமைகொண்டு ஏவலாளர்களை விட்டு அன்று பிறந்த பிள்ளையைக் கண்டு பிடித்துக் கொண்டுவரும்படி செய்தான். காவற்காரர் சென்று தேடிக் கோஷகனைக் கொணர்ந்தனர். அவனைப் பொக்கிஷ மந்திரி ஏழு தடவை கொல்ல முயன்றும் அவன் இறக்காமல் பலவிதமாகக் காப்பாற்றப்பட்டு இந்தப் பொக்கிஷ மந்திரிக்குப் பின் பொக்கிஷமந்திரி யானான்.

இவன் பொக்கிஷமந்திரியாக வாழ்ந்துவருகையில் பத்தாவதி என்ற ஊரில் ஒரு பொக்கிஷ மந்திரி இருந்தான். அவனும்கோஷகனும் நண்பர். அந்தஊரில் கொள்ளைநோய் உண்டானபோது அந்த அரசிறையமைச்சன் கோஷகனிடம் செல்லலாமென்று எண்ணித் தன் பெண்பிள்ளையோடு வந்தான். கௌசாம்பி வந்ததும் அவன் இரண்டொரு நாள் இளைப்பாறியபின் கோஷகனைக் காணலாமென்று எண்ணியிருந்தான். வந்த இரண்டு நாளைக்குள் பெண்ணை விட்டுவிட்டு இறந்துவிட்டான். அதனைக் கேட்ட கோஷகன் அந்தப் பெண்ணைத் தன் பெண்போலப் பாவித்து வளர்த்துவந்தான். அந்தப் பெண்ணுக்குச் சாமாவதியென்றுபெயர். அவள்பருவமடைந்தபோது அவளுக்குக் கோஷகன் ஐந்நூறு தாதியரை நியமித்திருந்தான்.

கௌசாம்பியில் விழாவொன்றுநடந்தது. அந்த விழாக்காணச் சாமாவதியும் தன்தோழிகளோடு சென்றிருந்தாள். அவளைக்கண்ட உதயணன் அவளுடைய அழகில் ஈடுபட்டுஅவளைத்தனக்குத் தரும்படி கோஷகனைக் கேட்டான். அரசர் குடித்தனத்திலிருக்கிற பெண்களைமணந்தபோது துன்புறுத்துகின்றனராம்; ஆனதாலே தன் பெண்ணை அரசனுக்கு மணஞ்செய்விக்க இயலாதென்று கோஷகன் சொல்லியனுப்பினான். இந்தச் செய்தியைக்கேட்ட அரசன் அமைச்சனதுசொத்தைப்பறிமுதல்செய்து அவனுடையவீட்டையும் பூட்டிவிட்டான். வீட்டுக்குத் திரும்பிவந்த சாமாவதி நடந்த வரலாற்றை யறிந்து தன் தகப்பனைச் சினந்துகொண்டு அன்னவாறு அரசனுக்குச் சொல்லியனுப்புவது தகுதியல்ல வென்று கூறினாள். அரசன் சாமாவதியை அவளது ஐந்து நூறு தாதியரோடு அழைத்துக் கொள்வதாக இருந்தால் அரசனுக்கு மணஞ்செய்விக்க இடையூறு ஒன்றும் இல்லையென்று சொல்லியனுப்பும்படி கோஷகனை வேண்டிக்கொண்டாள். கோஷகன் அவ்வாறே உதயணனுக்குச்சொல்லிவிட, உதயணன் அதற்குச் சம்மதித்துச் சாமாவதியை மணந்து தன் பட்டமகிஷியாக்கிச் சகலசிறப்புஞ் செய்து போற்றிவந்தான்.

உதயணன் பின் சண்ட பஜ்ஜோதனனுடைய மகளான வாசுலதத்தை என்பவளை மணந்துகொண்டான். ஒருநாள் சண்ட பஜ்ஜோதனன் உய்யான வனத்திலிருந்து திரும்பி வரும்போது தன்னுடைய பரிசனங்களைப் பார்த்துத் தன்னைவிடச் செல்வத்தில் மிகுந்தோர் உண்டோ என்று வினவினான். அவனைவிடக் கோசாம்பி அரசனான உதயணன் செல்வம் முதலாயவற்றில் மிகுந்தவன் என்று உடன் கூட்டத்தார் கூறினர். அதனைப் பொறாத பிரச்சோதனன் உதயணனைச் சிறைபிடிக்கவேண்டுமென்று கூறவே அது இயலாத காரியமென்று கூறினர். ஆனால் அவன் யானை வேட்டையில் கெட்டிக்காரனென்றும் யானைகளை வணக்குகின்ற மந்திரங்களை அறிவானென்றும் கேட்டவுடன் இயந்திர யானை ஒன்று செய்து அதுகொண்டு அவனைப் பிடிக்க ஏற்பாடு செய்தார்கள். அந்த யானை கோசாம்பிக்கு அருகிலே திரிவதைக் கண்ட வில்லிகள் உதயணனுக்குச் சொல்ல, அவன் அந்தயானையைப்பிடிக்க வேடர்பின்னே சென்றனன். எதிரிகள் இயந்திர யானையைச் செலுத்திச் சென்று உதயணனை உடன்கூட்டத்தினின்றும் பிரித்துச் சிறைப்படுத்திப் பிரச்சோதனன்முன் கொண்டுபோய் விட்டனர். இதனை அறிந்த உதயணனது சேனை உச்சயினியை முற்றுகையிட்டது.

அவன் உதயணனைச் சிறையில் வைத்துவிட்டு மகிழ்ச்சி கொண்டாடிக்கொண்டிருந்தான். அப்படிச் சிறையிடப்பட்ட மூன்றாம் நாள் உதயணன் தன் காவற்காரரைப் பார்த்து அரசன் என்ன செய்கின்றானென்று கேட்டான். அவர்கள் தங்கள் காவலன் மகிழ்ச்சி மேலிட்டுக் காலந் தள்ளுவதாகச் சொல்ல, உதயணன் காவலரைப் பார்த்து 'உங்களுடைய அரசன் பேடியா? எதிரியான அரசனைக் காவலிட்டுத் தூங்குவானா? ஒன்று அவனை விட்டுவிடவேண்டும் அல்லது கொல்லுதல்வேண்டும்' என்றுகூறினான். காவற்காரர் இந்தச் செய்தியைப் பிரச்சோதனனுக்கு அறிவிக்கவே, அவன் கோபங்கொண்டு உதயணனிடம் வந்து இவ்வாறு அவன் கூறியது உண்மையா வென்று வினவினான். உதயணன் அஃது உண்மையென்று சொல்லவே, அவனுக்குத் தெரிந்த யானைகளை வணக்குகின்ற மந்திரத்தைச் சொன்னால் விட்டுவிடுவதாகப் பிரச்சோதனன் கூறினான். பிரச்சோதனன் உதயணனுக்கு வணக்கஞ்செய்து கேட்டால் அந்த மந்திரத்தைச் சொல்ல முடியுமே யொழிய வணங்காதவருக்குச் சொல்ல இயலாதென்று உதயணன் கூறினான். ஆனால் தன்னை வணங்கும் எவருக்கும் இந்த மந்திரத்தை உபதேசிப்பதாக உதயணன் ஒப்புக்கொண்டான்.

பிரச்சோதனன் தன்னுடைய மகள் இந்த மந்திரத்தைக் கற்றுக்கொண்டால் தான் பிறகு அதனைக் கற்றுக்கொள்ளலாம் என்றெண்ணி ஒருபாயம் செய்தான். தன் மகள் வாசுலதத்தையைக் கூப்பிட்டு மந்திரந்தெரிந்த குஷ்டரோகி ஒருவன் வந்திருக்கின்றானென்றும், அவனுக்கு யானையை வணக்கும் மந்திரம் தெரியும் என்றும், அதனைத் திரைமறைவில் உட்கார்ந்து அவனிடமிருந்து கற்றுக்கொண்டு தனக்குச் சொல்லும்படியும் சொன்னான். உதயணனிடம் கூனியொருத்தி தன்னிடம் இருப்பதாயும் அவளுக்கு அந்த மந்திரத்தைக் கற்றுக் கொடுக்கும்படியும் சொன்னான். அவ்வாறே ஒருவரை யொருவர் பார்க்காமல் திரைமறைவிலிருந்துகொண்டு மந்திரம் உபதேசிக்கையில் ஒருநாள் வாசுலதத்தைக்கு மந்திரம் வாயில் நுழையவில்லை. உதயணனுக்குக் கோபம் பிறந்து 'கூனி முண்டையே உன் வாயில் நுழையவில்லையா? என்று வைதான். அதனைப் பொறாத வாசுலதத்தை 'குஷ்டரோகக் கசமே! யாரையடா சொன்னாய்' என்றாள். உதயணன் திரையை நீக்கிப் பார்த்து அவளை 'நீ யார்?' என்றான்.

வாசு:—நான் அரசனுடைய மகளான வாசுலதத்தை.

உத:—உனது பிதா என்னிடம் சொன்னபோது நீ ஒரு கூனி என்றாரே?

வாசு:—உன்னைக் குறித்துச் சொல்லும்போது நீ குஷ்டரோகி என்றார்.

உத:—ஒருவேளை நாமிருவரும் ஒருவரையொருவர் கண்டு காதலிப்போமென்று அரசன் கருதினான் போலும். அவ்வாறே ஆகுக' என்று அன்று முதல் இருவரும் மந்திரங்கள் பயிலாமல் மகிழ்ச்சியோடு காலந்தள்ளி வந்தனர். அரசன் தன்மகளைப் பாடம் நடந்து வருகிறதா என்று கேட்டபோது எல்லாம் சரிவர நடப்பதாகவே கூறிவந்தான்.

இவ்வாறு சிலநாள் செல்லவே, உதயணன் வாசுலதத்தையைப் பார்த்து அவளுக்குப்பெற்றோர் உடன்பிறந்தோர்செய்வதைக் காட்டிலும் கணவன் அதிகம் செய்யக்கூடுமென்றும், ஆதலினால் தன்னைச் சிறையினின்றும் மீட்டுவிட்டால் அவளுக்கு ஐந்நூறு தாதியரை நியமிப்பதுடன் அவளை முதல் ராணியாகச்செய்வதாகவும் கூறினான். அவள் தான் சொல்லுகிறபடி தன் கணவன் நடப்பதானால் அவ்வாறு செய்வதாக ஒப்புக்கொண்டாள்.

ஒரு நாள் வாசுலதத்தை அரசனிடம் சென்று வணங்கிவிட்டு ஒதுங்கி நின்றாள். அரசன் தன்மகளுக்கு வேண்டியதென்னவென்று கேட்டபோது, வாசுலதத்தை தான் மந்திரசித்தி பெறுவதற்குச் சில மூலிகைகள் வேண்டியிருக்கின்றனவென்றும் அவை இரவில் குறித்த காலங்களில் எடுக்கவேண்டியிருக்கிறதென்றும் கூறித் தானும் உதயணனும் நினைத்த போது அரண்மனையை விட்டு வெளியிற் செல்ல உத்தரவு வேண்டுமென்றும் கேட்டாள். அரசன் அவ்வாறே உத்திரவு கொடுத்ததோடு ஒருதனி வாயிலும் விட்டான். ஒரு நாள் பிரச்சோதனன் உய்யான வனம் சென்றிருந்தான். இதுதான் தக்க சமயம் என்று கண்ட உதயணன் பல சாக்குகளில் வெள்ளி தங்க நாணயங்களை நிறைத்துக்கொண்டான். பிரச்சோதனன் முற்பிறப்பில் ஒரு புத்தருக்குப் பிச்சை கொண்டுபோய்க் கொடுத்த புண்ணியத்தின் பயனாகப் பெற்ற ஐம்பது காதம் செல்லக்கூடிய பத்தாவதி என்ற ஒரு யானையின்மேல் வாசுலதத்தையை ஏறச் செய்து தானும் ஏறிக்கொண்டு கௌசாம்பி நோக்கி நடந்தான். இந்தச் செய்தியைக் காவலாளிகள் அரசனிடம் சொன்னார்கள். பிரச்சோதனன் உடனே ஒரு சேனையை அனுப்பினான். அந்தச் சேனையைக் கண்டவுடன் உதயணன் தன்னிடமிருந்த தங்க நாணய மூட்டையை அவிழ்த்துக் கொட்டினான். அந்தப் பொன்னை வந்த சேனை பொறுக்கிக்கொண்டு நின்றுவிட்டது. பின்னும் சில சேனை தொடர்ந்து வருவதைக்கண்ட உதயணன் வெள்ளி மூட்டையை உதறினான். வெள்ளியின் மேலிருந்த ஆசையால் சேனைகள் அதனைப்பொறுக்குவதற்குள்ளாக உதயணன் உசேனிக்கு வெளிப்புறத்திலிருந்த தனது படையை அடைந்தான். தன் சேனையோடு கோசாம்பி சென்று வாசுலதத்தையை மணந்து தலைமையிராணியாக்கினான்.

பின்னும் உதயணன் மாகண்டியாள் என்றொரு பார்ப்பனக் கன்னியை மணந்தான். குரு நாட்டிலே மாகண்டியான் என்றொரு பார்ப்பனன் இருந்தான். அவனுக்கு மிக்க அழகு வாய்ந்த பெண்ணொன்று இருந்தது. அதற்கும் மாகண்டியாள் என்று பேரிட்டான். அந்தப் பெண்ணைப் பலர் வந்து கேட்டும் அவர்கள் எல்லோரும் தகுதியில்லாதவர்கள் என்று பார்ப்பனன் தள்ளி விட்டான். ஒரு நாள் ததாகதரான புத்தர் ஓரிடத்திலிருக்கக் கண்டான். அவருடைய வடிவழகைக் கண்டு அவரே தனது மகளுக்கேற்ற மணவாளன் என நிச்சயித்தான். அவரை அங்கேயே இருக்கும்படியும் தனது பெண்ணை மணந்துகொள்ளும்படியும் வேண்டிக்கொண்டு வீடு திரும்பினான். அதன்பின் வீட்டுக்குச்சென்று தன்னுடைய மனைவியையழைத்துப் பெண்ணை அலங்கரிக்கச் சொன்னான். ஊரார்ந்தச் செய்தியைக் கேட்டு அதிசயம் அடைந்து கூடினார். ததாகதரோ இருந்த இடத்திலிருக்காமல் அந்த இடத்தில் தன்னுடைய அடிச்சுவட்டைப் பதித்துவிட்டு வேறிடம் சென்றனர். பின் பார்ப்பனன் தன் மனைவியோடு பெண்ணை அழைத்துக்கொண்டு வந்துதான் கண்ட துறவியைத் தேடினான். அவரைக் காணாது திகைக்கையில் அவருடைய அடிச்சுவட்டைக் கண்டான். சாஸ்திரங்களில் பண்டிதையாகிய அவனுடைய மனைவி இந்த அடிச்சுவட்டையுடையவர் பாசங்கடந்த பரமசாது என்றும் பேராசையுடையவனது அடிச்சுவடு அகலமாகவும், போக்கிரியின் அடிச்சுவடு நிலத்தில் அழுந்தியும் காமாதுரனது சுவடு தெரியாமலும் பாசங்கடந்தவனது சுவடு தெளிவாகவும் இருக்குமென்று கூறினாள். அந்தச்சமயத்திலே புத்தரும் அவ்விடம்தோன்றினார். பார்ப்பனன் அவரைக் கண்டு தன் பெண்ணை மணந்துகொள்ள வேண்டுமென்ன வேண்டிக்கொண்டான். அவர் பார்ப்பனனுக்கும் அவனுடைய மனைவிக்கும் நல்லறம் உணர்த்தி இந்த உடல் பொல்லாப் புன்குரம்பை மலமூத்திரங்கள் நிறைந்ததொரு கூடு என்று கூறினார். புத்தரது அறவுரையைக் கேட்ட பார்ப்பனனும் அவனதுமனைவியும் தம்மகளை பார்ப்பனனது இளவலிடம் ஒப்புவித்துவிட்டுத் துறவு பூண்டு அருகரானார்கள்.

மாகண்டியாள் என்ற பெண்ணோ தன்னை மலமூத்திரம் நிறைந்ததொருகூடு என்று சொன்னதற்காகத் ததாகதர்மேல் வன்மங்கொண்டு அவரைத்துன்புறுத்துவதாகத் தீர்மானித்தனள். இவளுடைய சிற்றப்பன் இவளுடைய அழகைக் கண்டு இவள் அரசருக்கே உரியவளென்று தீர்மானித்து, அவளை அலங்கரித்து அரசனான உதயணனிடம் கொண்டு சென்று அவளை மணந்துகொள்ள வேண்டினான். அவளது அழகில் ஈடுபட்ட உதயணன் அவளை மணந்து கொண்டு இராணியாக்கினான்.

இவ்வாறாக உதயணன் தனது மூன்று பட்டமகிஷிகளோடும் வாழ்ந்து வருகையில் சாமாவதி தனது தோழிகள் மூலமாகப் புத்தரது அறவுரையைக் கேட்டு அவரது அருளைப் பெற்றாள். இதனை அறிந்த மாகண்டியாள் புத்தரிடத்துள்ள தனது வன்மத்தைத் தீர்த்துக்கொள்ள இதுதான் சமயமென்று யோசித்தாள். அந்தக் காலத்தில் அரசன் தனது காலத்தை வாரம் ஒரு இராணியிடம் கழித்து வந்தான். மாகண்டியாள் அரண்மனையிலிருக்கும்போது சாமாவதிமேல் இல்லாத பல பொய்க் கோள்களைச் சொன்னதோடு அவள் புத்தத் துறவிகளுக்குப் பல பண்டங்களையும் அழித்துவிடுவதாக உரையேற்றி

யிருந்தாள். ஆனால் உதயணன் அதனை வெகுவாக நம்பவில்லை. மாகண்டியாள் ஒரு நல்ல பாம்பைப் பிடித்துக்கொண்டுவரச்செய்து அதனுடைய நச்சுப் பற்களை நீக்கிவிட்டு உதயணனுடைய யாழின் துளைக்குள் செலுத்திப் பூங்கொத்துகளை வைத்து மூடிவைத்திருந்தாள். சாமாவதி அரண்மனைக்குச் செல்லும் காலம் வந்தவுடன் மாகண்டியாள் தான் ஒருகெட்ட கனவு கண்டதாகவும் அவளுடைய அரண்மனைக்குப் போகவேண்டாமென்றும் உதயணனைத் தடுத்தாள். அந்தச் சொல்லைக் கேளாமல் சாமாவதியினுடைய அந்தப்புரத்துக்கு உதயணன் புறப்படவே மாகண்டியாளும் புறப்பட்டுச் சென்றாள். யாழும் உடன் போயிற்று. அங்கு உதயணன் துயிலுகையில் ஒருவரும் அறியாதபடி யாழிலிருந்த அப்பூங்கொத்தை மாகண்டியாள் நீக்கினாள். நாகம் இரண்டு மூன்றுநாளாக ஆகாரமின்றி இருந்ததால் புஸ் என்று கிளம்பிப் படமெடுத்து ஆடி உதயணனுடைய படுக்கையருகிற் சென்று தங்கிற்று. மாகண்டியாள் தனக்குச் சக்களத்தியான சாமாவதி அரசனைக் கொல்ல ஏற்பாடுசெய்துவிட்டதாகக் கூக்குரலிட்டாள். அரசனும் ஆய்ந்து ஓய்ந்து பாராமல் சாமாவதியின்மேல் வெறுப்புற்று அவளையும் அவளது அடிச்சிகளையும் வரிசையாக நிறுத்தித் தனது வில்லைவளைத்துக் கூர்த்தஅம்பொன்றைவிட்டான். சாமாவதி பெரியோரைப் பேணித் ததாகதரை வணங்கிவந்ததாலும் அவள் குற்றமற்றவளானதாலும் விட்ட அம்பு அவள்மேற் படாமல் திரும்பி வந்து உதயணன் மார்பில் தைத்தது. இதனைக் கண்ட உதயணன் சாமாவதி நிரபராதியென்றெண்ணி அவள் காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான். அவள் தன்னால் ஆகக்கூடிய தொன்றுமில்லையென்றுகூறிப் புத்தரையும் சங்கத்தையும் தருமத்தையும் கேட்கும்படி சொல்லினாள். அன்று முதல் அவன் ஆனந்தரிடம் அறவுரை கேட்டுவந்தான்.

தன் எண்ணம் பலிக்காமற் போனதைக் கண்ட மாகண்டியாள் தனது சிற்றப்பனுக்குச் சொல்லியனுப்பி அவனை வரவழைத்துச் சாமாவதி யந்தப்புரத்துக்குச் சென்று அவளுடைய துணிகளையும் உடுப்புகளையும் எண்ணெயில் நனைத்துத் தீவைத்து எரித்துவிடும்படி செய்தாள். அந்தப்படியே அவன் துணிகளை எண்ணெயில் நனைத்துத் தூண்களிலும் மற்ற இடங்களிலும் சுற்றிக்கொண்டிருக்கும்போது சாமாவதியின் சேடிகள் இப்படிச் செய்வதற்குக் காரணமென்னவென்று விசாரித்தனர். அந்தப் பார்ப்பனன், தூண்கள் பழுதாக விருப்பதால் அவற்றைப் பலப்படுத்த வேலை செய்யப்படுகின்றதாகச் சொல்லி அவர்களை அங்கு வராமற் செய்து தாளிட்டு நெருப்பு வைத்தான். அந்தப்புரம் நெருப்புப்பற்றி எரிவதைக் கண்ட சாமாவதி இவை கடவுளுடைய செயலென்று கூறிக் கடவுளைத் தியானிக்கும்படி கூறினாள். இவ்வாறு சாமாவதியும் அவளது உடன்கூட்டமும் ஒருங்கே அழிந்துபோனதைக் கேட்ட உதயணன் அதிக வருத்தப்பட்டு இவ்வாறு அவர்களைத் தீயிலிட்டது மாகண்டியாள் என்று அவளுடைய வாய்ப்பிறப்பாலே அறிந்தான். அதற்காக மகிழ்வதாகப் பாசாங்கு செய்து உதயணன் மாகண்டியாளை மெச்சுவதாகக்கூறி அவளுடைய உறவினர்களை வரவழைத்து அவர்கள் எல்லோரையும் ஒரு பெருங்குழிவெட்டி அதனிற்றள்ளி மேலே செத்தையைப் போட்டுக் கொளுத்திக் கொன்றான். பெரிய சட்டியில் எண்ணெயையூற்றி வைத்து அடுப்பிலேற்றிக்காய்ச்சி அதனில் மாகண்டியாளுடைய சதையை அறுத்துப்போட்டு வறுத்து அவளைத் தின்னும்படி செய்து சித்திரவதை செய்தான். இவ்வாறாக இருவரும் இறந்த பின் வாசுலதத்தையோடு சுகமாக வாழ்ந்து வந்தான்.

சூரியன்

[331-வது பக்கத் தொடர்ச்சி]

சூரிய குடும்பம்.

தூமகேதுக்கள்.

“ நகைத்தொழி லறியா நன்னகர் வரைப்பகம்
புகைக்கொடி சமந்து பொங்கெரி தோன்ற ”

பெருங்கதை [1 - 47. 70 - 71.]

அடங்காப் பிள்ளைக்ள்:—ஒரு குடும்பத்தில், தாய் தந்தையர்களுக்கு அடங்காப் பிள்ளைகள் சில இருத்தல் போலச் சூரிய குடும்பத்திலும், சூரிய ஆட்சிக்கு அடங்காத பிள்ளைகளாகச் சில இருக்கின்றன. இவையே தூமகேதுக்களாம் (Comets). இவற்றை வால் நக்ஷத்திரம்என்று பொதுமக்கள் வழங்கி வருகின்றனர். இவற்றின் வருகை, ஒரு ஒழுங்குக்குட்பட்டதல்ல. அடியார்க்கு நல்லார், கரந்துறைகோட்கள், வட்டம், சிலை, நுட்பம், தூமம் என நான்காக விளங்குவனவற்றில், தூமக்கோள், புகைக்கொடி எனப் பெயர்பெறும் என்பார். இவற்றின் தோற்றத்தைத் தீர் அதிர்ஷ்டக் காட்சி என்று உலகினர் கருதுகின்றனர்; உலகத்திற்கு ஏதோ தீங்கு விளையப் போவதைக் காட்டும் உற்பாதம் என நம்புகின்றனர். இவற்றை, இவ்வாறு, வானத்தே சகுனம் காட்டும் விண்மீன்களாய்க் கருதுவதில், யாதேனும் உண்மையுண்டோ என ஆராய்வோம்.

செல்லும் வழி:— தூமகேதுக்கள், சூரிய குடும்பத்தைச் சேர்ந்த கிரகங்களைப் போன்றவை அல்ல. இவை, கெட்டிப் பொருளால் அல்லாமல், வாயுப் பொருளால் அமைந்தவையாகும். இவற்றின் பாதைகள், மற்ற கிரகங்களின் பாதைகள்போலிராமல், நீண்ட வட்டமாய்த் திகழ்கின்றன. கிரகங்களின் பாதைகள் எல்லாம், சற்றேறக்குறைய ஒரே பரப்பில் (One plane) இருக்கின்றன, என்று கூறலாம்; தூமகேதுக்களின்பாதைகளோ, இக்கோளங்களின்பாதைகளின் குறுக்கே செல்லுவதால், வேறு பல பரப்பில் உள்ளனவாம்.

வடிவம்:— தூமகேதுவின் வடிவை நோக்கும்பொழுது, அதனில் வட்டமான ஒரு தலையும், பல கல் தூ

ரம் நீளமுள்ள ஒருவாலும், தோன்றுகின்றன. தலை, சூரியனைப் பார்ப்பதுபோல இருக்க, வாலோ, இந்தத் தலைக்குப் பின்னால், வெளிப்புறத்தே, பரந்து கிடக்கின்றது. சூரியனுக்கு அருகே வரும்போது, ஏதேனும் ஒரு கிரகத்தின் பாதையினுள்ளே சிலபோது நுழைகின்றது; அப்படி நுழைந்தபோது அந்தக் கிரகத்தை எதிர்ப்படின், இத்தூமகேதுவினுள்ள பொருள்கள், அக்கிரகத்திற்போய் மோதுகின்றன. அதனால், அக்கிரகத்திற்குப் பெருங்கேடு விளையும். தூமகேதுவின் வாலினுள்ள வாயுப்பொருள்களினின்று, விஷப்பொடிகள் வருவதாயும் சிலர் சொல்லுகின்றனர். தூமகேதுக்கள் ஒருமுறை சூரியனைச் சுற்றிவந்தபின் மறுபடியும், அவ்விதமே, அவை சுற்றிவருமோ, அல்லது, அந்தரவெளியில் பறந்துபோய் அலைந்துகொண்டிருக்குமோ, நாம் அறியோம். இதனைப்பற்றி முடிவாக ஒன்றும் சொல்ல இயலாது. இவை, சூரியகுடும்பத்தைச் சேர்ந்தனவோ என்றுகூட முன்னர் வானசாஸ்திரிகள் ஐயப்பட்டிருந்தனர். ஆனால், இப்போது இவைகள் அனைத்தும், சூரியனது ஆட்சிக்கடங்கியவையே என வானசாஸ்திரிகள் துணிந்து கூறுகின்றனர்.

சில தூமகேதுக்கள்:—1680-ம் ஆண்டில், நியூட்டனால் சோதிக்கப்பட்ட தூமகேது, சூரியனைச் சுற்றிவர, 600 வருஷமாகிறது. 1682-ம் ஆண்டில் தோன்றியது, ஹாலி (Halley) என்பவர் பெயரால் வழங்கிவருகின்றது. இது சூரியனைச் சுற்றிவர 75 வருஷங்கள் செல்கின்றனவாம். ஈது, இரண்டாவது முறை 1759-ம் வருஷத்திலும், மூன்றாவது முறை 1910-ம் வருஷத்திலும், தோன்றியதாம். 1811-ம் ஆண்டில் மிகப்பெரிய தூமகேது தோன்றி, ஒன்றரை வருஷம், கண்ணுக்கும் புலனாகி விளங்கியதாம். இவ்வாறு தோன்றி மறையும் பொருள்களின் இலக்கணத்தை, இன்னமும் வான சாஸ்திரிகள், ஆராய்ந்து வருகின்றனர்.

எரி நக்ஷத்திரங்கள் (Meteors)

ஆடு கயல்தேள் தனுச்சிங்கம் எரிமீன்
விழுமேல் அரசழிவாம்,
கோடு மகரந் துலையலவன் கும்பம்
அஃகம் குறைந்திடுமே;
தேடு மிதுனம் மந்திரிசாம்; தெரிவை
யுந்தான் பிணிபெரிதாம்;
ஓடும் இடபம் மழையில்லை; உடுவீழ்
குறியென் றறிந்துரையே.

—வருஷாதி நூல்

உற்பாதம்:—இப்பாடல், வானத்தே நிகழும் மற்றோர் அற்புதக்காட்சியைக் கண்டு உலகினர் அஞ்சி நின்றதை விளக்குகின்றது. இராக்காலங்களில், நாம், வானத்தைச் சற்றுநேரம் கவனிப்போமானால், சில நக்ஷத்திரங்கள், நிலைபெயர்ந்து விழுவனபோலத் தோன்றுகின்றன. இவைகளே எரி நக்ஷத்திரங்கள். இவை வீழ்வதைக் கண்டதும், இவற்றைக் கண்டதால் வரும் தீமையை, யாதேனும் ஒரு பூவின் பெயரைக்கூறி ஒழித்துக்கொள்ளச் சிலர் முயல, இன்றும் நாம் பார்க்கின்றோம். இரவிலே, அநேக எரி மீன்கள் விழுமாயின், அதுதான், உலகின் கேட்டிற்கோர் அறிகுறியாகும் என்பர் சிலர். ஊனக்கண் கொண்டு காணும்போது இவை சிலவாய்த் தோன்றினும் தூரதிருஷ்டி கொண்டு காணும்போது, பலவாய்த் தோன்றுகின்றன.

பூமியில் மோதுதல்:—இவை அந்தர வெளியிலே, சுழன்று திரிகின்ற சிறு உருவங்கள்; பூமியின் ஆகருஷண சக்தியால் வலித்து இழுக்கப்பட்டுப்பூமியின் ஆகாச எல்லைக்குள்ளே வந்து வீழ்கின்றன. இவை, நிமிஷத்திற்கு 2700 கல் தூரம் ஓடுகின்றன. இவை, இவ்வளவு வேகமாகச் செல்லும்போது, நமது வாயு மண்டலத்தில் மோதிக்கொண்டால், சூடு மிகுந்து எரிந்து தூளாகின்றன. எரிந்தும் எரியாமலும், பூமியின்மீது விழும் இவை, பெரிய பாறையளவாகவும் இருக்கின்றனவாம். மெக்ஸிகோவில் விழுந்த பாறை, 50 டன் எடையிருந்ததாம். இவ்வாறு விழும் பாறைகளுக்குக் காந்தச் (Magnetic) சக்தியுண்டு. இவைகள் எரிந்து போவதனால் உண்டாகும் சாம்பல், நம் பூமியின்மேலே படிந்துகொண்டே வருகின்றது. ஒரு வருஷத்தில் 146,000,000 எரி நக்ஷத்திரங்கள், சாதாரணமாய், நமது கண்களுக்குத் தோன்றுகின்றன என வானசாஸ்திரியார் ஒருவர் கணக்கிட்டிருக்கிறார். இவை மிகுதியாக விழுவது, ஆகஸ்டு மாதத்தில் 9, 10, 11ம் தேதிகளிலும்; நவம்பர் மாதத்தில் 13, 14, 15, 27, 28, 29 தேதிகளிலுமாம்.

தற்காலக் கொள்கை:—தற்கால வான சாஸ்திரிகள், இவைகளைப் பற்றிய சில உண்மைகளை வெளியிட்டுள்ளார்கள். இவை, சூரியனைச் சுற்றி யோடுகின்ற மிகச் சிறு வடிவங்களின் கூட்டமாகும். பூமி சூரியனைச் சுற்றி வருகையில் இக்கூட்டங்களுக் கிடையே செல்வதனால், இவைகளில் அநேகம் பூமியின் வாயுப் படலத்தினுள் அகப்பட்டுக்கொண்டு மொத்துண்டு எரிந்துபோகின்றன. இவற்றின் பாதைகள் எல்லாப் பக்கங்களிலும் நிறைந்திருக்கின்றன. இவற்றில் சிலவே மிக நெருக்கமானவை. முற்றும் எரிந்து போகாமல், பூமியில் விழுந்து கிடக்கும் இப்பாறைகளைப் பரிசோதிக்கையில், இரும்பு நிக்கல் கல் முதலிய பொருள்களால் அமைந்தவையே இவ் வெரிமீன்கள் எனத் தெரியவருகிறது. பூமியில் இல்லாத பொருள் ஒன்றும் இப்பாறைகளில் காணோம். ஆகவே, பூமியில் இருக்கின்ற தாதுப்பொருள்கள்தான், மற்ற அண்டங்களிலும் இருக்கவேண்டும் என்பதக்கு, ஈதும் ஒரு சான்றாகும்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல ணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

—திருஞான சம்பந்தர்.

பெயர்.	எடை Mass பூமியை விட எத்தனை மடங்கு	பரப்பு Surface பூமியை விட எத்தனை மடங்கு	அளவு Volume பூமியை விட எத்தனை மடங்கு	வேகம் Velocity ஒரு விநாடிக்கு எத்தனை கல்	வருஷம் சூரியனைச் சுற்றி வரும் நேரம் எத்தனை வருஷம்	நாள். தன்னைத் தானே சுற்றி வரும் நேரம் நா. மணி. நிமிஷம்	சூரியனிலிருந்துவரும் உஷ்ணமும் ஒளியும் பூமியில் வருவதைவிட எத்தனை மடங்கு	பிரதிபிம்ப சக்தி albedo	உபகிரகங்களின் தொகை	சூரியத் தோற்றம்-பூமியில் காணப்படுவதை விட எத்தனை மடங்கு
சூரியன்	332000	11973	1310130			25 4 48			0	—
புதன்	·048	·147	·06	29·7	.24	25	6·67	·14	0	7
வெள்ளி	·820	·945	·92	21·9	·62	23 21	1·91	·76	0	1·96
பூமி	1	1	1	18·5	1	23 56	1	·5	1	1
செவ்வாய்	·107	·285	·15	15	1·88	24 37	·43	·22	2	·5
வியாழன்	317.7	119·3	1304	8·1	11-86	9 55	·037	.62	9	·04
சனி	94·8	85	783	6	29·46	10 14	·011	·72	10	·01
யுரானஸ்	14.6	16·2	65	4·2	84·02	9 30	·003	·6	4	·0025
நெப்டியூன்	17	19·3	85	3·4	164·78		·001	·52	1	·0011
சந்திரன்	·012	·02	·075			27 7 43	1	·17	0	—

பெயர்	சூரியனிலிருந்துள்ள தூரம்		குறுக்களவு Diameter		குருத்துவம் Gravity		இறுக்கம் Density	
	கோடி கல்	பூமியை விட எத்தனை மடங்கு	ஆயிரம் கல்	பூமியை விட எத்தனை மடங்கு	பூமியை விட எத்தனை மடங்கு	ஒரு விநாடியில் விழும் அடிகள்	பூமியை விட எத்தனை மடங்கு	நீரைவிட எத்தனை மடங்கு
சூரியன்			866·4	109·4	27·65	444·6	·25	1·39
புதன்	3·6	·387	3·03	·383	·43	6·91	·85	4·72
வெள்ளி	6·72	·723	7·7	·972	·82	13·19	·89	4·94
பூமி	9·29	1	7·918	1	1	16·08	1·00	5·55
செவ்வாய்	14·15	1·524	4·230	·534	·38	6·11	·71	3·92
வியாழன்	48·33	5·203	86·5	10·92	2·65	42·61	·24	1·32
சனி	88·66	9·539	73	9·21	1·18	18·97	·13	·72
யுரானஸ்	178·19	19·18	31·9	4·029	·90	14·47	·22	1·22
நெப்டியூன்	279·16	30·05	34·7	4·395	·89	14·31	·20	1·11
சந்திரன்			2·163	·273	·17	2·73	·61	3·39

கம்பராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்—10. கிட்கிந்தைப் படலம்

[325-வது பக்கத் தொடர்ச்சி]

வந்தவர் யாரும் பரதனே யாவார்

இராகவன் இருந்தவிடம் கடிது நண்ணுங் கருத்தினோடு புறப்பட்டு,

அங்கத னுடன்செல வரிகண் முன்செல
மங்கைய ருள்ளமும் வழியும் பின்செலச்
சங்கையி லிலக்குவற் றழுவித் தம்முனிற்
செங்கதி ரோன்மகன் கடிது சென்றனன்

[சிவந்த கிரணங்களையுடைய சூரியனது புத்திரனாகிய சுக்கிரீவன், தன்னிடத்தில் சந்தேகம் நீங்கிய இலக்குமணனைத் தழுவி, அங்கதன் உடன் வரவும், வானரர் முன்னே செல்லவும், காதலுடைய மங்கையர்களது மனம் தன்னைத் தொடர்ந்துவரவும், நடந்தவழி பின்னாகப்போய்விடவும், தன் தமையன் என்னும்படியான இராமனிடத்திற்கு விரைவாகச் செல்வானானன்]

இப்படி,

ஒன்பதி னாயிர கோடி யூகந்தன்
முன்செலப் பின்செல மருங்கு மொய்ப்புற
மன்பெருங் கிளைஞரு மருங்கு சுற்றுற
மின்பொரு பூணினன் செல்லும் வேலையில்

[ஒன்பதினாயிரகோடி வானரச்சேனைத் தன் முன்னும் பின்னும் பக்கத்திலும் நெருங்கிவரவும், நிலைத்த பெரிய உறவினர் அயலில் சூழ்ந்துவரவும், மின்னல்போன்றவொளி வீசுகின்ற ஆபரணங்களை யணிந்த சுக்கிரீவன் செல்லுஞ் சமயத்தில்]

கொடிவன மிடைந்தன குமுறு பேரியின்
இடிவன மிடைந்தன பணில மேங்கின
தடிவன மிடைந்தன தயங்கு பூணொளி
பொடிவன மெழுந்தன வானம் போர்த்தவே

[துகிற்கொடிகள் காடுபோல் அடர்ந்தன.முழங்கும் பேரிகையின் ஒலித்திரள் நிறைந்தன. சங்குகள் முழங்கின. விளங்கும் ஆபரணங்களின் ஒளியாகிய மின்னற் கூட்டங்கள்நிறைந்தன.புழுதிகள்கிளம்பி வானத்தைமறைத்தன]

பொன்னினிற் முத்தினின் புனைமென் றாசினின்
மின்னின மணியினிற் பளிங்கின் வெள்ளியிற்
பின்னின விசும்பினும் பெரிய பெட்புறத்
துன்னின சிவிகைவெண் சிவிகை சுற்றின

[பொன்னினாலும், முத்துக்களாலும், அலங்கரித்த மெல்லிய துணிகளாலும், பிரகாசிக்கின்ற இரத்தினங்களினாலும்,ஸ்படிகங்களினாலும்,வெள்ளியினாலும், செய்யப்பட்ட பல்லக்குக்கள் நெருங்கிவந்தன; வெண்குடைகள் ஆகாயத்தினும் பெரியனவாய் விரும்பும்படி சூழ்ந்து வந்தன]

சிவிகை பல நெருங்கிவந்தனவேனும் சுக்கிரீவன் அவைகளொன்றினும் ஏறினானலன். இலக்குவனோடு சுக்கிரீவனும் ஒரு சிவிகையில் ஏறி இராமன் பாற் சென்றனர் என்று வான்மீகி முனிவர் கூறியிருப்பதற்கு மாறாகக் கம்பர்,

வீரனுக் கிளையவன் விளங்கு சேவடி
பாரினிற் சேறலிற் பரிதி மைந்தனுந்
தாரினிற் பொலன்கழ றழுங்கத் தாரணித்
தேரினிற் சென்றனன் சிவிகை பின்செல

[இராமனது தம்பியின் விளங்குகின்ற சிவந்தபாதங்கள் தரையில் நடந்து செல்வதால், சூரியனது புதல்வனாகிய சுக்கிரீவனும், கிண்கிணிமாலை போல அழகிய பொன்னாலாகியதன் வீரக்கழல் சப்திக்க, தன்பல்லக்குப் பின்னே வறிது வர, பூமியாகிய தேரின்மேற் சென்றான்]

என்று காட்டுகின்றார். முப்புரமெரித்த காலத்தில் இப்பூமி சிவபிரானுக்குத் தேராக அமைந்தது பற்றி இப்பொழுது அது சுக்கிரீவனுக்கும் தேராக அமைதல் கூடுமென்னப் பகரும்முகத்தால் அவன் தரையினடந்துசென்ற பான்மையைச்சுவையுறச்செப்புகின்றனர் இப்புலவர். அன்னவாறு,

எய்தினன் மானவ னிருந்த மால்வரை
நொய்தினிற் சேனைபின் பொழிய நோன்கழல்
ஐயவிற் குமரனுந் தானு மங்கதன்
கைதொடர்ந் தயல்செலக் காதன் முன்செல

[உடன்வந்த சேனைபின்தங்கவும், அங்கதன் பக்கத்தில் தொடர்ந்துவரவும், இராமனைக் காணவேண்டும்என்னும் ஆசை முன்செல்லவும், வலிய வீரக்கழலையும் அழகிய வில்லையும் உடைய இலக்குவனும் தானும், இராமபிரான் இருந்த பெரிய மலையை விரைவாக அச்சுக்கிரீவன் சென்றடைந்தான்]

கண்ணிய கணிப்பருஞ் செல்வக் காதல்விட்
டண்ணலை யடிதொழ வணையு மன்பினா
னண்ணிய கவிகுலத் தரச னுடொறும்
புண்ணியற் றொழுகழற் பரதன் போன்றனன்

[மதிப்புமிக்க அளவற்ற பெரிய செல்வத்தில் ஆசையைவிட்டு இராமபிரானை அடிதொழும்படி வந்துசேரும்அன்பினால் நெருங்கிய வானரகுலத் தலைவனாகிய சுக்கிரீவன், நாள்தோறும், புண்ணியத்தின் உருவம்போல்பவனாகிய இராமபிரானை அடிதொழுகின்ற பரதனை ஒத்தான்.]

தன்னை வந்தடைந்த செல்வத்தை விட்டு இராமபிரானை அடையுமொருஆர்வமுடன்வருதலின், முன்னைய சரிதத்தால் இவ்விருவருக்குமுள்ளவேற்றுமை எவ்வளவேயாயினும்,இந்தச்சுக்கிரீவனும்பரதனையே போலுமொரு பெருமை யெய்தினான். செல்வத்தில் ஆசைவைக்காமல் எம்பெருமானைச் சென்று சேர்ந்தால் அதுபோதும். பரதனைப்போல் என்றுமே மிகப் பெருஞ்செல்வத்தை ஒன்றென மதியாதா ராயினும் ஆகுக, சுக்கிரீவனைப்போன்று அதனைப் பெறுவதற்கு அவாவினோ ராயினும் ஆகுக; மயக்கமறத் தெளிந்த சிந்தையராகி ஒருநீரரா யொழுகினாராயினும் ஆகுக, மற்று, இச் சுக்கிரீவனைப்போல் மதுவின் வேகத்தால் இடையில் மயங்கினவ ராயினும் ஆகுக. எம்பெருமானது அருளை முன்னர்ப் பெற்றிருப்பவராயினும் ஆகுக, பெற்றிரிதார் ஆயினும் ஆகுக; அவன்முன் சென்று நிற்கும் நிலையில் அனைவருமே ஒரு நீரராகிவிடுகின்ற மேன்மையைக் கண்டறிந்த கம்பர்தம் கவிதை இங்குச் சுக்கிரீவனைப் பரதனே போன்றவனாக்கிவிடுகின்றது. கடவுள் திறத்தினை அறியவல்லவர்கள் கலைஞர்களே. அக்கலைஞர்வாய்நின்றே கடவுளுந் தன் சொற்களைக் கற்கின்றதென்னும்படி,இராமனுஞ் சிறிது பின்னர்ச் சுக்கிரீவனைப் “பரதனே” என்றழைப்பது இவ்வருமையினைச் சாலச் சுவை செய்து ஊட்டுகின்றது.

இனி, வான்மீகமுனிவர்தம் முறைப்படி இராமனும் சுக்கிரீவனும் சந்தித்து அளவளாவும் செய்தியைச் சிறிது நோக்குவோம்:—

[சுக்கிரீவன் வானரர்கள்கொண்டுவந்து வைத்த அந்தக் காணிக்கைகளையெல்லாம் பெற்றுக்கொண்டு அவர்களைப் புகழ்ந்துவிடைகொடுத்தனுப்பினான். அவன் இப்படித்தங்களுக்கு இடப்பட்ட வேலையை முடித்துவந்த சூராகிய வானரர்களை அனுப்பிவிட்டு இனித் தனது காரியமும் இராமபிரானுடைய எண்ணமும் முடிந்துவிட்டனவென்றெண்ணினான். அப்போது லக்ஷ்மணர் மிக்க பலத்தையுடைய வானரோத்தமனாகிய சுக்கிரீவனை நயமொழிகளால் சந்தோஷப்படுத்தி, வணக்கமாக “திருவுடையாய், உமக்குப் பிரியமாகில் இனிக்கிஷ்கிந்தையைவிட்டுப்புறப்படுவோம்” என்றார். லக்ஷ்மணர் கூறிய இந்த வார்த்தையைக்கேட்டுச் சுக்கிரீவன் மிகவுஞ் சந்தோஷமடைந்து “அப்படியே யாகட்டும்; நாங்கள் போவோம். நீர் சொன்னபடி நான் செய்கின்றேன்” என்றான். சுக்கிரீவன் சுபலக்ஷணங்களையுடைய லக்ஷ்ணமருக்கு இவ்வாறு சொல்லிவிட்டுத் தாரை முதலாகிய பெண்களுக்கு விடைகொடுத்தனுப்பினான். பின்பு அவன் “இங்கே வாருங்கள்” என்று தன் வானரத்தலைவர்களை உரத்துக் கூப்பிட்டான். அந்த வார்த்தையைக் கேட்டு அவர்கள் சீக்கிரம் வந்து சேர்ந்தார்கள். அவர்களுள் பெண்கள்முன் போகத்தக்கவர்கள் கைகூப்பிக்கொண்டு சுக்கிரீவன்முன் வந்து நின்றார்கள் அப்படி முன்னே வந்து நின்றவர்களைச் சூரியன்போன்ற ஒளியுடைய சுக்கிரீவன் நோக்கி “சீக்கிரமாக எங்களுக்கொரு சிவிகை கொண்டுவாருங்கள்” என்றான். அதைக் கேட்டு வானரர்கள் விரைவாகவோரழகிய சிவிகையைக் கொண்டுவந்தார்கள். அதனைப் பார்த்துச் சுக்கிரீவன் லக்ஷ்மணரை நோக்கி “லக்ஷ்மண, இதில் சீக்கிரம் ஏறும்” என்று சொன்னான். அப்படிச்சொல்லிவிட்டுச் சூரியனைப் போன்ற ஒளியையுடைய சுக்கிரீவன் பெரிய வானரர்கள் சுமக்கின்ற அந்தப் பொற் சிவிகையின்மேல் லக்ஷ்மணருடன் ஏறினான். தலைக்குமேலே வெண்குடை நிழற்ற, நாற்புறத்தும் வெண்சாமரம் இரட்ட, சங்க படகங்கள் முழங்க, வானரர்கள் புகழ, மேலாகிய ராஜதிருவுடனே சுக்கிரீவன் சென்றான். அப்படி அவன் சுறுசுறுப்புடைய அநேக வானவீரர்கள் ஆயுத பாணிகளாய்ச் சூழ்ந்து

வர இராமர் இருக்குமிடம் போய்ச்சேர்ந்தான். அங்குச் சேர்ந்தவுடன் அவன் லக்ஷ்மணரோடு சிவிகையை விட்டு இறங்கி இராமரை அணுகிக் கைகூப்பி நின்றான். அவன் கைகூப்பினதைக் கண்டு அவனுடன் வந்த வானரர்க ளெல்லாரும் கைகூப்பினார்கள். தாமரைமுகைகள் நிறைந்துள்ள தடாகம்போலக் கைகூப்பி நிற்கும் வானரச்சேனையைக் கண்டு இராமர் சுக்கிரீவனிடத்தில் மகிழ்ச்சியடைந்தார். சுக்கிரீவன் அவர் பாதத்தில் விழுந்து தலைவணங்க, இராமர் அவனை எடுத்து அன்பினாலும் மரியாதையினாலும் தழுவிக்கொண்டார்; தழுவினபின்னே "இப்படி இருக்க" என்று சொன்னார். பின்பு தரையிலிருந்த சுக்கிரீவனை இராமபிரான் நோக்கி "அறம் பொருள் இன்பங்களைப் பாகுபாடுசெய்து ஒவ்வொன்றையும்தக்ககாலத்தில் அனுபவிப்பவனே அரசனாவான்; அறத்தையும் பொருளையும் நீக்கிவிட்டு இன்பத்திற் பயின்று நிற்பவன் மரநுனியில் படுத்துறங்கிக் கீழேவிழுந்தபின் விழித்துக்கொள்பவனாவன். தன் பகைவர்களை அழித்து நண்பினரைச் சேர்த்து அறம் பொருள் இன்பங்களின் பயனைத் தக்க காலத்தில் அனுபவிக்கின்ற அரசன் தருமமுடையவனாவான். பகைவரை யழிப்பவனே, நாம் முயற்சி செய்தற் கேற்றகாலம் வந்துவிட்டது. நாம் இனிச் செய்யவேண்டுவதை மந்திரிகளோடு ஆலோசனை செய்க" என்றார். அப்பொழுது சுக்கிரீவனானவன் இராமரைநோக்கி "தடந்தோள, கெட்டுப்போன எனது செல்வத்தையும் கீர்த்தியையும் நிலையான வானர ராச்சியத்தையும் உம்முடைய அருளினால் நான் மீளவும் பெற்றுக்கொண்டேன். ஒருவன் செய்த நன்றிக்குக் கைம்மாறு செய்யாதவன் மக்களுள் கடைப்பட்டவனாவான். இப்படிப்பட்ட வலியுடைய நூறுவானரத்தலைவர்களும் பூமியிலுள்ள வனரர்க ளெல்லாரையும் அழைத்துக்கொண்டு இங்கு வந்திருக்கிறார்கள். பெருங் காடுகளையும் சோலைகளையும் துர்க்கங்களையும் நன்றாக யறிந்தவரும் கோரரூபம் உடையவருமான வீரத்தன்மையுடைய கரடிகளும், முசுக்களும்; விரும்பிய ரூபமெடுக்கவல்ல தேவர் கந்தர்வர்களின் பிள்ளைகளாகிய வானரர்களும்தங்கள் தங்கள் சேனைகள் சூழ வழியில் வந்துகொண்டிருக்கின்றார்கள். இந்திரன்போன்ற வலியுடையவானரர்கள், நூறு, நூறாயிரம், கோடி, அயுதம், சங்கு, அற்புதம், நூறற்புதம், மத்தியம், அந்தம்சமுத்திரம், இன்னும்பரார்த்தம்என்னும் தொகையினர்களாக வருகின்றனர்கள். விந்தமலையிலும் மேருமலையிலும் வசிக்கின்ற மந்தரமலையும் மேருமலையும் போலும் பெரிய ரூபத்தையுடைய இந்த வானரர்கள் யுத்தத்தில் உமக்குத் துணையாக வந்து, இராவணனை அவன் சுற்றத்தாரோடும் கொன்று, உம் மைதிலியை மீட்டுத் தருவார்கள்" என்றான். புத்திமானாகிய இராமர் தமது சொற்படி சுக்கிரீவன் செய்த ஏற்பாடுகளைக்கண்டு களிப்பெய்தி அலர்ந்த நீலோற்பலம்போல விளங்கினார்.

சுக்கிரீவன் கைகூப்பிக்கொண்டு இவ்வாறு கூற, தருமவான்களுட் சிறந்த இராமர் அவனைத் தன் கைகளால் கட்டித் தழுவி அவனை நோக்கி "இந்திரன் மழையை வருஷிப்பதும், ஆயிரங்கிரணங்களையுடைய சூரியன் ஆகாயத்திலிருந்து இருளைப் போக்குவதும், சந்திரன் தன் கிரணங்களால் பூமியை நிர்மலமாகச் செய்வதும், உம்மைப் போன்றவர்கள் நண்பர்களுக்குக் கைம்மாறு செய்வதும் ஆச்சரியமன்று. நற்குணங்களெல்லாம் உம்மிடத்தில் கூடியிருப்பதும் ஆச்சரியமன்று. நீர் எப்போதும் நன்மையையே பேசுவபர் என்பதை நான் அறிவேன். அன்ப, உம்முடைய துணையைக்கொண்டு நான் என் பகைவரை எல்லாம் வெற்றியடைவேன்; எனது இனிய நண்பராகிய நீரே எனக்குத் துணைசெய்யவேண்டும். புலோமனின் புத்திரியாகிய சசியை அநுஹ்லாதன் எடுத்துக்கொண்டு சென்றாற் போல, அந்த ராக்ஷசர்களுட் கடையாயினான் தனது நாசத்தினபொருட்டே சீதையை எடுத்துக்கொண்டுபோயினான். செருக்குற்றிருந்த சசியின் பிதாவை இந்திரன் கொன்றாற்போல, நான் எனது கூரிய பாணங்களால் இராவணனைச் சீக்கிரத்தில் கொல்வேன்" என்று சொன்னார்.

சுக்கிரீவனைக் கண்டவுடன் இராமன் முன் ஒருபோதும் அவன்பால் சீற்றங் கொண்டிராதான்போலப் பேசுகின்றான். ஆயினும், சுக்கிரீவனது துணைவலியாலும் அவன் சேனைபலத்தினாலும், தன்னுடைய காரியம் கைகூடவேண்டியிருக்கின்றதென்னும் ஒரு நினைவுபற்றி இராகவன் அங்ஙனம் அமைதியுற்றனனோ என்று அயிர்க்கும்படி இராமனது வாசகங்கள் சில வான்மீகர் நூலின்கண் வழங்கப்பெற்றிருக்கின்றன. கம்பர், இராமனது சீற்றந் தணிந்தவகையை மாத்திரங் கூறி, அந்தச் சந்தேகம் தோன்றாமல் காக்கின்ற பரிசு பாராட்டற் குரியதாய் நிற்கின்றது. அதனை இனிக் காணலாம்.

ஒத்தெல்லோ

["Shakespeare's —"Othello"]

அங்கம் 2. களம் 3.

[332-வது பக்கத் தொடர்ச்சி]

மான்டானோ:-தக்கோய் ஒத்தெல்லோ, ஆபத்தா மளவு நான் காயப்பட்டுளேன்[1]. நின் பதாகையாளன்-எனக்கு ஒருவாறு துன்பஞ் செய்யும் பேச்சினை நான் மிதமாக்க— நான் அறிந்ததை யெல்லாம் உனக்குத் தெரிவிக்கக்கூடும்[2]; சுய அபிமானம் ஒருதுர்குணமாகவும், மூர்க்கமானது எதிர்க்கும்போது நம்மை நாமே காத்துக் கொள்வது பாவமாகவும் இருந்தாலன்றி, இவ்விரவு நான் தவறாகச் சொல்லியது செய்தது ஒன்றும் அறியவும் அறியேன்[3].

ஒத்தெல்லோ:—இப்பொழுது, தெய்வசாக்ஷியாக என் இரத்தமானது எனது சாக்கிரதையான வழிகா

கலகம் விளைந்த காரணத்தைச் சொல் என்று கேட்ட ஒத்தெல்லோவிற்கு மான்டானோ பதிற் சொல்கிறான்.

(1) நான் பட்டிருக்கின்ற காயம் உயிரிற்கே ஆபத்தாக முடியலாம் - என்பது பொருள்.

(2) நான் பேசினால் வலி அதிகமாவதால், என்ன நிகழ்ந்ததென்பதை இயகோவே உனக்குத் தெரிவிக்கட்டும். நான் அறிந்த அளவு அவனும் அறிவான்—என்பது பொருள்.

(3) மூர்க்கனொருவன் என்னை எதிர்த்தபோது நான் என்னைக் காத்துக்கொண்டேனே யன்றித் தவறாக நான் ஒன்றும் சொல்லவும் இல்லை, செய்யவும் இல்லை. தன்னைக் காத்துக்கொள்வது பாவமன்று, தன்னைக்காத்துக்கொள்ளல் வேண்டுமென்ற சுயஅபிமானம் தோஷமன்று; ஆகையால் நான் ஒரு குற்றமுஞ் செய்யவில்லை - என்பது பொருள்.

(4) கோபம் காமம் முதலிய மனோவிகாரங்களுக்கு இரத்தம் இருப்பிடமாகுமென்று கருதினர். "கோபத்தால்

ட்டிகளை ஆளத்தலைப்பட்டு, சினமானது என்னுடைய சிறந்த விவேகத்தைக் கரியாக்கி நெறிகாட்ட முயல்கின்றது [4]. நான் ஒருமுறை மூள்வேனாயினும், அல்லது இக்கரத்தினை மாத்திரம் உயர்த்துவேனானால் உங்களிற் சிறந்தவன, எனது வசையில் அமிழ்ந்தவனாவான் [5]. இவ் வக்கிரம கலகம் எங்ஙனம் துவக்கியது, யார் மூட்டினார், இதனை எனக்குத் தெரியத் தருவாய்; இக்குற்றத்தில் ஒப்புக்கொள்ளலானவன், இருவரும் ஒரே பிரசவத்தில் என்னுடன் இரட்டையாயிருப்பினும், என்னை இழந்தவனாவான் [9]. என்ன; இன்னும் திகைத்திருக்கும் போருடைய ஒரு பட்டினத்தில், சனங்களின் இதயங்கள் விளிம்பளவு அச்சத்தால் நிறைந்திருக்க, இரவில் காவலுக்கமைந்த காப்புக்கூடத்தின் மீது, சொந்தமான குடும்பச்சண்டை நடத்துவதா! மிகக் கொடிய விபரிதம் இது [7] - இயகோ, யார் துவக்கினர் இதனை?

மான்டா:-பக்ஷபாத உறவினாலேனும், உத்தியோக உடன்பாட்டினாலேனும், உண்மையன்றி அதிகமேனும் குறைவேனும் பகர்வாயாயின், பின் நீ போர் வீரன் அல்லன் [8].

இயா:—அத்துணையருகில் என்னைத் தீண்டவேண்டா [9]: இந் நாவானது மைக்கீல் காஸ்ஸியோவிற்கு விரோதம் செய்யவேண்டுவதைக் காட்டிலும் என் வாயினின்று அதனை வெட்டிவிட்டிருக்க வேண்டுகின்றேன். ஆயினும், உண்மையைப் பேசுதல் அவனுக்கு யாதும் தீங்கு செய்யாதென்றே நான் என்னையே உடன்படுத்திக்கொள்கின்றேன் [10]—இப்படியாம் இது தலைவ; மான்டானோவும் நானும் பேசிக்கொண்டிருக்க, உதவிக்குக் கூவிக்கொண்டு ஒருவன் வருகின்றான்; அவன்மீது செலுத்தற்கு நிச்சயித்த கத்தியுடன் காஸ்ஸியோ அவனைத் தொடர்கின்றான். ஐய, இம்மேன்மகன், காஸ்ஸியோவினிடை சென்று தாழுமாறு வேண்டுகின்றான். நானோ, இப்பட்டினமானது இவ்வாரவாரத்தினால் - அப்படியே நேர்ந்தும்விட்டது—பயத்தினுள் படியாதபடி, கூவும் அவனைத் துரத்தித் தொடர்ந்தேன் [11]. அவன்காலின் வேகமுடையவனாகி என் கருத்தினைக் கடந்து ஓடிவிட்டான் [12]; கத்திகள் மோதிக் கிளுகிளுக்கும் சத்தத்தைக் கேட்க நான் திரும்பிவிடலாயினேன் [13]. காஸ்ஸியோ ஆணைகள் பெருத்திருக்கின்றான்; இவ்விரவுவரையில், ஒருபோதும் நானதனை முன் சொல்வதற்கு இயலாது [14]. நான் திரும்பிவந்தபொழுது-மிகச் சிறநேரமே இது [15]-நீயே பிரித்தபோது மீண்டுமவர் இருந்ததுபோன்றே அடியும்குத்துமாக நெருங்கியிருக்கக் கண்டேன். இவ்விடயம்பற்றி நான் இதன்மேல் ஒன்றும் விளம்ப இயலாது. மற்று, மனிதர் மனிதரே: உத்தமமானவர்களும் ஒவ்வொருபோது மறந்துவிடுகின்றனர் [16]. கடுஞ்சினம் மூண்டிருப்பவர், தமக்கு நன்மை நாடுகின்றவர்களை அடிப்பதுபோல, காஸ்ஸியோ அவனுக்குச் சிறுதீங்கு ஏதேனும் செய்திருக்கலாமாயினும், பொறுமையாற் கடக்கமாட்டாததொரு விபரித நிந்தனையினின்று பாய்ந்தது ஏதேனும் அவனிடமிருந்து, நிச்சயம், காஸ்ஸியோ பெற்றிருக்கவேண்டுமென்று நம்புகின்றேன் [17].

இரத்தம் கொதிக்கின்றது'' என்னும் வழக்கு இதற்குச் சான்றாகும். அறிவு பொறை நிறை முதலியன சாக்கிரதையான வழிகாட்டிகளாம். இரத்தம் இவைகளை ஆள்கின்றது, என்பது, அறிவிற்கு மாறாயினும், எனது சினம் செய்யத் தூண்டுவதை செய்யும்படி நேரும், எனப் பொருள்படும்.

சினம்......முயல்கின்றது = சினமானது என்னுடைய விவேகத்தின்மேல் கரிபூசியதுபோல் அதனை இருக்குமிடந் தெரியாமற் செய்து பலமற்றதாக்கித் தன் வழியே என்னை இழுக்க முயல்கின்றது - என்பது பொருள்.

(5) வசை என்பது இங்குத் தண்டனை எனப் பொருள்படும்.

எனது வசையில் அமிழ்ந்தவனாவான்-எனது தண்டனையால் அழிந்துவிடுவான் - என்பது பொருள்.

(6) இந்தக் குற்றம் செய்தவனாக ஏற்படுகின்றவனும் நானும், ஒரே பிரசவத்தில் இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்திருந்தாலும் நான் அவனைக் கண்ணோட்டம் சிறிதுமின்றித் தண்டித்துவிடுவேன் - என்பதுபொருள்.

என்னை இழந்தவன் ஆவான்-தன்னுடன் நான் உடன்பிறப்பு ஆகின்ற உறவை இழந்து பின் என்னுடைய தண்டனைக்கே உரியவனாவான் - என்பது பொருள்.

(7) பட்டினமோ போர்ப்பயத்தினால் திகைத்திருக்கின்றது. இச்சனங்கள், எந்தவேளையில் என்ன நேருமோ என்னும் பயம் நிறைந்திருக்கின்றனர். இந்நிலையில், காவலுக்கென்று அமைந்தவர்களே தம்முள் கலகம் செய்வார்களாயின், பிறகு இச்சனங்கள் நம்மை எங்ஙனம் மதிப்பார்; ஆதலின், இது கொடிய ஒரு குற்றம் ஆகின்றது-என்பது பொருள்.

(8) இயாகோ, நீயும் காஸ்ஸியோவும் உறவினர்களாக இருப்பீர்களாயின், அவ்வுறவுபற்றிய பக்ஷபாதத்தினாலேனும், அல்லது ஒரே தலைவன்கீழ் நீங்கள் இருவரும் உத்தியோகம் செய்கின்றபடியால், அதுபற்றி ஒருவரையொருவர் காட்டித்தரலாகாது என்னுங் கருத்தினாலேனும், நடந்தது நடந்தபடி கூறாமல் அதிகப் படுத்தியோ குறைவாகவோ பேசுவாயானால், அப்புறம் நீ ஒரு போர்வீரன் என்ற பெயரிற்கு உரியவனாகமாட்டாய்—என்பது பொருள்.

(9) போர்வீரன் என்னும் பெயரையே என்னுடைய உடைமைகளிலெல்லாம் மிகப்பெரியதாகவும் எனது அந்தரங்க உரிமையாகவும் மதித்திருப்பவன் நான்; அதன்மேல் நீ ஆணை வைக்கலாகாது—என்பது பொருள்.

நான் எப்படியும் காஸ்ஸியோவின் சார்பில் சிறிது பக்ஷபாதமாகப் பேசவேண்டித்தான் இருக்கும்; ஆயினும் நீ இவ்வளவு பெரிய ஆணையை வைத்துவிட்டாய். இனி என்ன செய்வேன், என்பவன்போல் நடித்து, காஸ்ஸியோவின் குற்றத்தைத்தான் மறைக்க முயல்கின்றவனென்றே ஒத்தெல்லா நம்பும்படிசெய்யும் இயாகோவின் இத்தந்திரம் மிகவும் ஆழமானது.

(10) உண்மையைச் சொன்னாலும் அது காஸ்ஸியோவிற்கு விரோதமாகாது என்னுந் துணிவினால்தான் நான் நடந்ததைச் சொல்ல உடன்படுகின்றேன்—என்பதுபொருள்.

(11) இவ்வாரவாரம் பெருகி அதனால் சனங்கள் அஞ்சிக்கலங்கலாகாதுஎன்றே நான் அவனைத் துரத்திச்சென்றேன்; ஆயினும், காவல்மணியைஅடித்துக் கலக்கத்தை உண்டாக்கிவிட்டான்—என்பது பொருள்.

நிகழ்ந்ததற்குமாறாக இயாகோ பொய்சொல்கின்றான் என்பது வெளிப்படை.

(12) நான் தடுப்பதற்குமுன் வேகமாக ஓடிவிட்டான் என்பது பொருள்.

(13) அவனைத்துரத்திப் பிடிக்கமாட்டாமையோடு, கத்திச்சண்டைசெய்கிற சப்தமும் கேட்டதால் நான் திரும்பிவிட்டேன்—என்பது பொருள்.

(14) ஆணைகள்பெருப்பதாவது—'உன்னைக் கொல்லாமல் விடேன்' என்பதுபோன்ற கொடிய ஆணைகள் இட்டு வைவது. காஸ்ஸியோ இப்படிச்செய்தான் என்று இதற்குமுன் சொல்வதற்கில்லை. இவ்விரவுவரையில், இவன் இப்படிச்செய்யக்கூடியவன் என்றுநான் எண்ணியவனல்லன் என்பது பொருள்.

(15) துரத்திச்சென்ற நான் மிகச் சிறு நேரத்திற்குள் திருதிரும்பி வந்துவிட்டேன்—என்பது பொருள்.

ஒத்தே:-இயாகோ, காஸ்ஸியோவிற்கு எளியதாகும்படி, நின் உண்மையும் அன்பும் இவ்விஷயத்தை மழுப்பிவைக்கின்ற தென்பது அறிவேன்-(காஸ்ஸியோவைப் பார்த்து), காஸ்ஸியோ, உன்னை நான் நேசிக்கின்றேன், ஆயினும் இனி ஒருபோதும் நீ யென் உத்தியோகஸ்தனாக இருக்கவேண்டா:—

[டெஸ்டிமோனா வருகின்றாள்]

எனது மெல்லியற் காதலி எழும்பலாக வில்லையோ? பார்[18]. உன்னை யோர் உதாரணம் ஆக்குவேன்.[19]

டேஸ்டி:-நிகழ்வ தென்ன?

ஒத்தே:-இனிய நறுங்கனியே [20], இப்பொழுது எல்லாம் நேராகிவிட்டது. பள்ளிகொள்ள வந்துவிடு. ஐயா, உனது புண்களுக்கு நானே இரண வைத்தியனாக இருப்பேன்-இவனை அழைத்துச் செல்லுங்கள்.

[மான்டானோவை அழைத்துச் செல்கின்றனர்]

இயாகோ; பட்டினத்தைப்பற்றிச் சாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டு இந்தத் துஷ்டச்சண்டையால் திகைப்புற்றிருப்பவர்களை அமைதியடையும்படி செய் வா, டெஸ்டிமோனா; தம்முடைய நறுந்துயில் கலகத்தால் கலைந்தெழும்பலாவது போர்வீரர்தம் வாழ்க்கையாம்.

[இயாகோவும் காஸ்ஸியோவுந் தவிர ஏனையோர்போகின்றனர்.]

(16) மனிதர் மனிதரே, என்பது, மானுட இயற்கை அப்படித்தான் இருக்கும் என்று பொருள்படும். இயாகோ போன்ற கயவர் தாம் செய்யும் துரோகத்திற்கு ஆதாரமாகவே, மானுட இயற்கை என்ற ஒன்றைக் கற்பித்து உதவிக்குஅழைத்துக்கொள்வார்.

மறந்துவிடுகின்றனர்— தம்மையும் மறந்து ஒழுக்கந் தவறிவிடுகின்றனர்—என்பது பொருள்.

(17) காஸ்ஸியோவின்பொருட்டுப் பரிந்துபேசுபவன் போல அவனிடம் குற்றம் உண்டென்று கூறுகின்ற தந்திரம் வாய்ந்தது இவ்வாசகம்.

காஸ்ஸியோ மான்டானோவுக்குச் சிறிய தீங்கு ஏதேனும் செய்திருக்கலாம். ஆயினும், மான்டானோ காஸ்ஸியோவை ஏதேனும் நிந்தித்திராவிட்டால் காஸ்ஸியோ அவனை அடித்துக் காயப்படுத்தியிருக்கமாட்டான் என்பதும் நிச்சயம்—என்பது பொருள்.

பொறுமையாற்கடக்கமாட்டாத நிந்தனை—போகட்டும் என்று பொறுத்துக்கொள்ள இயலாத அத்துணை பெரிய நிந்தனை.

(18) நீங்கள் செய்த கலகத்தால் என் காதலி நித்திரை கலைந்து வருகின்றாள் பாருங்கள்—என்பது பொருள்.

(19) இப்படித் தம்மை மறந்து கலகம் விளைவிப்பவர் என்ன தண்டனை பெறுவார்கள் என்பதை எல்லோரும் அறியும்படி உன்னைநான் தண்டித்துக்காட்டிப் பிறர் இவ்வண்ணம் செய்வதற்கு அஞ்சுமாறு புரிவேன்—என்பது பொருள்.

(20) இனிய நறுங்கனியே, என்று டெஸ்டிமோனாவை அருமையுற அழைக்கின்றான்.

கலித்தொகை

[334-வது பக்கத் தொடர்ச்சி]

மருதக்கலி 3

பரத்தையர் சேரியிலிருந்து தலைவன் வந்தனன் என அறிந்த காமக்கிழத்தி தன்காதல் மிகுதிகூறி ஊடினாள். அதனை உணர்ந்து அவன் அவளைச் சார்ந்து நின்றான். அவனைக்கண்டு ஊடல் தீர்கின்றவளாய் அவள்கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

பொதுமொழிபிறர்க்கின் றிமுழு தாளுஞ்செல்வர்க்கு
மதிமொழி யிடன்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனா வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர
ஊரன்மன் னுரனல்ல னமக்கென்ன வுடன்வாரா
தோரூர்தொக் கிருந்தநின் பெண்டிரு ணேராகிக்
களையாநின் குறிவந்தெங் கதவஞ்சேர்ந் தசைத்தகை
வளையின்வாய் விடன்மாலை மகளிரை நோவேமோ
கேளல னமக்கவன் குறுகன்மி னெனமற்றெந்
தோளொடு பகைபட்டு நினைவாடு நெஞ்சத்தேம்
ஊடியார் நலந்தேம்ப வொடியெறிந் தவர்வயின்
மாறீர்க்கு மவன்மார்பென் றெழுந்தசொன்
[னோவேமோ
முகைவாய்த்த முலைபாயக் குழைந்தநின் றாரெள்ள
வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்
சேரியாற் சென்றுநீ சேர்ந்தவில் வினாயினன்
றேரொடு திரிதரும் பாகனைப் பழிப்பேமோ [தெம்மிற்
வொலிகொண்ட சும்மையான் மணமனை குறித்
பொலிகெனப் புகுந்தநின் புலையனைக் கண்டயாம்
எனவாங்கு
நனவினான் வேறாகும் வேளா முயக்க
மனைவரிற் பெற்றுவந்து மற்றெந்தோள் வாட
வினைய ரெனவுணர்ந்தா ரென்றேக்கற் றாங்குக்
கனவினா னெய்திய செல்வத் தனையதே
யைய வெமக்குநின் மார்பு

தரவு

(வரி 1-5) பொதுமொழி - இம்மண்ணுலகம் யாவர்க்கும் பொது என்னும் சொல், பிறர்க்கு இன்றி-பிறர்க்கு இல்லாதபடி, முழுது ஆளும் செல்வர்க்கு - இவ்வுலகம் முழுவதையும் ஆளும் அரசர்களுக்கு, மதிமொழி - புத்திமதியாகிய மொழியினை, இடல் மாலை - சொல்லுதலாகிய ஒழுக்கத்தையுடைய, வினைவர் போல்-அமைச்சர் சொற்களைப்போல, வல்லவர் - எதனையும் கூறவல்லவருடைய, செது மொழி-பயனற்ற சொற்களை, சீத்த-நீக்கிய, செவி செறுஆக-தம் காதே வயலாக, முதுமொழி நீரா-முன்னிருந்த சான்றோர் கருத்துநிரம்பிய செய்யுட்களே தம் சொல்லைவளர்க்கும் நீராக,புலன் நா உழவர்-அறிவினையுடைய நாவாகிய ஏராலே உழுது உண்ணும் புலவருடைய, புது மொழி - புதிய கவிகளை, கூட்டு உண்ணும்-மிகுதியாகக் கேட்கின்ற, புரிசை சூழ்-மதில் சூழ்ந்த, புனல் ஊர-நீரையுடைய ஊரையுடையவனே.

அமைச்சர் மொழிகளைக் கொள்ளுமாறுபோலப் புலவர் மொழிகளையும் கொள்ளும் ஊரன் என்பது கருத்து.

தாழிசை

(வரி 6 - 11) நமக்கு அவன் கேள் அலன் - நமக்கு அவன் உறவு அல்லன், குறுகன்மின் என - ஆகையால் அவனிடம் செல்லாதீர் என்று, எம்தோளொடு - எம்தோள்களோடு, பகைபட்டு-விரோதப்பட்டு,நினைவாடும் நெஞ்சத்தோம் - (நின்னைக்கூடும்) நினைவுகெடுகின்ற மனமுடைய யாம், நமக்கு ஊரன் மன் உரன் அல்லன் என்ன-நமக்கு ஊரன் மிகவும் பற்றுக்கோடு அல்லன் என்றுசொல்லி, உடன் வாராது - உன்னுடன் கூடாமல், ஓர் ஊர் தொக்கு இருந்த - ஒரே ஊரில் மறைந்திருந்த, நின் பெண்டிருள் - உனது சேரிப்பரத்தையருடனே, நேராகி -

ஒப்பாகி, களையா நின் குறிவந்து - நீங்காத நின் அடையாளத்தையுடைய இடத்தில் வந்து, (அங்குக் காணுமையால்) எம் கதவும் சேர்ந்து, - எமது கதவையடைந்து, அசைத்த கை - தட்டிய கையின், வளையின் வாய்விடல் மாலை - வளையினுலே தம் வரவினைச் சொல்லுதலை இயல்பாக உள்ள, மகளிரை - பரத்தையர்மீது, நோவேமோ - வருத்தம் கொள்ளோம்.

எம்மைவிட்டு நீ பிரிதற்குப் பரத்தையர் காரணமாயினும், நின்னைப்பழிப்பதன்றி தம்பாலுள்ள தலைவனை நாடி வேறு மாதர் வருவாராயின் கோபங்கொள்ளும் அப்பரத்தையரைப்போல யாம் அவர்மாட்டுக் கோபங்கொள்ளோம்—என்பது இத்தாழிசையின் கருத்து.

நின என்பது பெயர்ச்சொல், முதனிலைத் தொழிற்பெயர் என்பர் பிற்காலத்தார்

மற்று - வினைமாற்று.

(வரி 12 - 15) முகை வாய்த்த - மொக்கைப்போன்ற, முலைபாய - முலைகள் பாய்தலால், குழைந்த நின் தார் எள்ள - அழகு கெட்ட நினது மாலை எம்மை இகழ்ந்து கூற, வகைவரி - அழகிய வரிகளையுடைய, செப்பினுள், செப்பினுள்ளே, வைகிய கோதையேம் - அடைத்து வைத்த மாலையின் தன்மையையுடைய யாம், ஊடியார் நலம் தேம்ப - ஊடிய இற்பரத்தையர் அழகு கெடும்படி, ஒடி எறிந்தவர் வயின் - குற்றுயிராகச் செய்த சேரிப்பரத்தையரிடத்து, மால் தீர்க்கும்- வேட்கையைத் தீர்க்கும், அவன் மார்பு என்று எழுந்த சொல் - அவன் மார்பு என்று எழுந்த சொல்லுக்கு, நோவேமோ - வருந்தோம்.

செப்பு-காற்று உட்புகாதவாறு மூடிபோட்டுள்ள சிறு பாத்திரம்.

ஒடிய எறிந்து என்பது ஒடி எறிந்து என நின்றது. சிறிது வெட்டியதனுல் சாய்ந்த மரக்கிளை குற்றுயிர் கொண்டிருப்பதுபோலத் தலைவனது பிரிவினுல் தான் குற்றுயிர் கொண்டிருப்பதாகக் கூறினள் காமக்கிழத்தி.

(வரி 16 - 19) ஒலிகொண்ட சும்மையால் - மிக்க ஆரவாரத்தாலே, மணமனை குறித்து - நீ மணம் செய்துகொள்கின்ற மனையாக எண்ணி, எம் இல்-எமது வீட்டிலே, பொலிக என புகுந்த - வாழ்க வாழ்க என்று கூறிப்புகுந்த,நின் புலையனை கண்ட யாம் - உனது புலைத்தொழிலையுடைய பாணனைக் கண்ட யாம், சேரியான் சென்று - சேரிதோறும் போய், நீ சேர்ந்த இல் வினுயினன்- நீ சேர்ந்துள்ள வீட்டைக்கேட்பானுய், தேரொடு திரிதரும் - தேரோடு திரியும், பாகனை பழிப்பேமோ - பாகனைப் பழிப்போமோ.

வினுயினன் - முற்றெச்சம்.

தனிச்சொல்

எனவாங்கு - அசை.

சுரிதகம்

(வரி 20 - 25) நனவினுன் - உண்மையில், வேருகும் - வேருய் இருக்கும், வேளா - நீ விரும்பாத, முயக்கம் - புணர்ச்சியை, மனைவரில் பெற்று உவந்து-எம்இல் வரும் பொழுது பெற்று இன்புற்று, மற்று - (நீ நீங்கியபின்) எம் தோள் வாட - எம்தோள் மெலிதலினுலே, இனையர் என உணர்ந்தார் என்று-மற்றப்பெண்கள் இவளும் இவனும் இத்தன்மையர் ஆயினர் என அறிந்துகொண்டார்களே என்று வருந்தி, எக்கற்று ஆங்கு-எக்கமுற்ற பொழுது, ஐய - தலைவனே, நின் மார்பு-உனது மார்பு, எமக்கு-எமக்கு, கனவினுன் எய்திய செல்வத்து அனையது - கனவிலே அடைந்த செல்வத்தை ஒத்தது.

ஏ-தேற்றமும் ஈற்றசையுமாம்.

கலாநிலயம்

முன்னைய வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன, உடனே பெற்றுக்கொள்வது நலம்.

1928, 1930, 1931, 1932, 1933, 1934 வருடத்தியவை கிடைக்கும்.

பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை	ரூ.	7	8	0
ஆப்லெதர் கில்ட் பைண்ட்	,,	9	0	0
ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது		10	0	0

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன்றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னுப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினுல், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளி நாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.

காலரா மருந்து
IDL வின்கயூர்

கெர்ப்பாசய டானிக். ரூ.2-0-0
சூதக டானிக். ரூ. 1-8-0

ஏமாற வேண்டாம்
நேரில் பெற்றுக்கொள்க

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை. 0-4-0
கோரோஜனை .. 0-6-0
பாலசஞ்சீவினி .. 0-4-0
ப்ரலஸுதா டானிக் ரூ 1

40 நாட்கள்
உபயோகப்
பாக்கெட்
அணு ஒன்று

IDL ச்யாவனப்ராசா
IDL பிருங்காமலக தைலம்
கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரண பாக்கெட்
IDL 61, மெடிகேடட் டப்பி

ஜ்வரேக்
IDL ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சதவைத்யசாலை - நஞ்சன்கூடு

போலிகள் இருப்பதால் வீதிகளில் வாங்க வேண்டாம்

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

மைசூர்த் தங்கம்:—மைசூர் நாட்டில் கோலார்த் தங்கச் சுரங்கங்கள் ஏற்பட்டது முதல் இந்நாள் வரை சுமார் எட்டுகோடிப் பொன் மதிப்புள்ள தங்கம் கிடைத்திருக்கிறது. இதனால் மைசூர் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் 43 லட்சம் பொன். சுமார் ஐம்பதுவருடமாக இந்த வேலை நடக்கிறது.

* * *

பைபில் பிரசாரம்:—உலகமெங்கும் வியாபார மந்தமும் வறுமையும் மிகுந்திருப்பினும், பைபில் பிரசாரம் மும்முரமாக நடந்துவருகின்றது. சென்ற மார்ச் மாதத்துடன் முடிந்த ஒரு வருஷத்தில் சுமார் ஒரு கோடியே பத்துலட்சம் பிரதிகள் விற்பனையாகி இருக்கின்றனவாம். பைபில் சங்கம் ஏற்பட்டது முதல் நாளதுவரை 46 கோடி, 40 லட்சம் பிரதிகள் வெளியா யிருக்கின்றன. இதுவரை மொழி பெயர்த்திருக்கிற பாஷைகளைத் தவிரச் சென்ற ஆண்டில் பதினாறு புதிய பாஷைகளில் வெளியிட்டிருக்கிறார்கள்.

* * *

தீமேல் நடந்த தீரன்:—இங்கிலாந்திற்குச் சென்ற குதாபக்ஸ் என்பவர் சென்ற மாதத்தில் தீயின் மேல் நடந்து தமது திறமையைக் காட்டி வெள்ளைக்காரர்கள் வி[illegible]படையுமாறு செய்திருக்கிறார். இரண்டு டன் ஒ[illegible]ரக்கட்டை, ஒரு டன் விறகு, அரை டன் கரி, [illegible]து காலன் பாரபின், இருபத்தைந்து பிரதி லண்டன் டைம்ஸ் பத்திரிகை இத்தனையும் போட்டுக் கொளுத்திய தீ மீது குதாபக்ஸ் பூமேல் நடப்பதுபோல நடந்திருக்கிறார். லண்டனை அடுத்த சரே என்ற ஒரு நகரத்தில் இந்த அற்புதம் நடந்தது. தீயில் நடக்குமுன் வைத்தியர்கள் குதாபக்ஸ் பாதத்தைச் சோதித்தார்கள். தீமிதித்த பின்னும் சோதித்தார்கள். ஒரு வித காயமும் இல்லை. ஆனால் குதாபக்ஸைப் பின்பற்றித் தீயில் நடக்க விரும்பிய இருவர் பாதங்கள் பெரிதும் எரிந்து விட்டன.

Indo-Commercial Bank, Ltd.,
Mayavaram.
Capital, Reserves, etc., as at 30th August 1935 : Rs. 10,62,245.
BRANCHES :—
Madras Office :—
107, Armenian Street.
Bazaar Branch :—
260, China Bazaar Road.
Madura, Karaikudi, Virudhunagar, Tuticorin, Kumbakonam, Tiruvarur, Erode, Vizianagaram, Pudukottah, Tinnevelly, Salem and Trichinopoly.
SUB OFFICES:—
Shiyali, Chidambaram, Conjeevaram and Tanjore.
All kinds of Banking Business undertaken on terms which may be ascertained on application.
S. N. N. SANKARALINGA IYER.
Managing Director,
107, Armenian Street, Madras.

மரணத் தொகை:—இந்தியாவில் நிமிடத்திற்கு 23 பேர் வீதமும் நாள்தோறும் 32715 பேர் வீதமும் சாகிறார்களாம்.

* * *

சத்திய முஸ்லிம்கள்:—வடநாட்டிலுள்ள ஒரு வகையான முஸ்லிம்கள் பொய் சொன்னால் உடனே கால் விரல்கள் நடுங்குகின்றனவாம். அதனால் நீதிஸ்தலத்தில் சாட்சி சொல்லும்பொழுது அவர்கள் பாதரட்சை போட்டிருந்தால் அதனை நீக்கிவிடும்படி நீதிபதிகள் கூறுகிறார்கள். நீதிபதியின் கண்கள் காட்சி சொல்லும் முஸ்லிமின் கால் விரல்கள்மீதே பதிந்திருக்குமாம்.

* * *

பெரு மீன்:—வட கடலில் ஒரு ஜெர்மன் கப்பல் இருபத்துநாலடி நீளமும் ஐந்து டன் நிறையும் உள்ள ஒரு பிரமாண்டமான சுறு மீனைப் பிடித்திருக்கிறது. இதுவரை அவ்வளவு பெரிய மீன் அகப்பட்டதே கிடையாதாம். அந்த மீனின் ஈரல் மட்டும் ஒரு டன் நிறை யிருந்ததாம். அதன் வயிற்றுக்குள் ஐந்து அந்தர் சிறுமீன்கள் இருந்தனவாம்.

* * *

புன்னகையின் பயன்:—டாக்டர் ஹோவார்டு லோரெயின் என்பவர் ஒருபெரிய பரோபகாரி. அவருக்கு மனைவி மக்கள் கிடையாது. ஹானா மெடாப் என்ற பத்து வயதுச் சிறுமி அமெரிக்கா நியூயார்க் நகரில் உள்ள ஒரு தர்ம சங்கத்தில் ஒரு நடனம் புரிந்தாள். அந்தச் சங்கத்தின் போஷகர்களில் ஒருவரான டாக்டர் ஹோவார்டு அப்பொழுது அதைப்பார்த்துக் கொண்டிருந்தார். நடனம் புரிந்த பத்துவயதுப் பெண்ணான ஹானா அவரை நோக்கிச் சிரித்த குழந்தைச் சிரிப்பு அவருக்கு அற்புதமான மகிழ்ச்சியை அளித்ததாம். அந்த ஆனந்தச் சிரிப்பை அவர் வாழ்நாளில் மறக்கவேயில்லை. பின்னர் டாக்டர் ஹோவார்டும் அந்தச் சிறுமியும் ஒருவரை ஒருவர் சந்திக்கவேயில்லை. கன்னியின் புன்னகை மட்டும் டாக்டரின் கருத்தைவிட்டு நீங்கவில்லை. இது இருபது வருஷத்திற்கு முன் நடந்த செய்தி. மேற்கண்ட நிகழ்ச்சிக்குப் பின்னர் டாக்ட நியூயார்க்கை விட்டுச் சிகாகோ சென்று நாலுலட்சம் பொன் சம்பாதித்தார். அவர் இறந்து போனார். அவர் மனைவிமக்கள் இல்லாதவராதலின் தமது செல்வத்தைத் தமது வாழ்நாளில் தமக்கு மகிழ்ச்சியளித்தவர்களுக்குப் பகிர்ந்துகொடுத்திருக்கிறார். அவ்வாறு பயன் பெற்றவர்களில் இப்பொழுது ப்ரூகலின் நகரில் வயதுவந்த மாதா யிருக்கிற ஹானா ஒருத்தி. இருபது ஆண்டுகளுக்குமுன் கன்னியாயிருந்த ஹானாவுக்கு முப்பதினாயிரம் பொன், (நாலுலட்சம்ரூபாய்) கிடைத்திருக்கிறது. ஏழைகளா யிருந்த ஹானா குடும்பத்தார் இப்பொழுது நியூயார்க் நகரில் மிக நல்ல வீதியில் போய்ச் சுகமாய் வாழ்ந்திருக்கிறார்கள்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனம்! "காம சாஸ்திரம்" இனம்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)